மேல் மாகாண சபை - 2024 ஆம் ஆண்டு

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மேல் மாகாண சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2025 யூலை 31 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 05 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மேல் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	அமைச்சு மற்றும் திணைக்களங்களை உள்ளடக்கிய 09 நிறுவனங்களின் பெறுமதி ரூபா 743 மில்லியன் ஆன நிதியல்லாச் சொத்துக்கள் அந்த நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாது இருந்ததுடன் அதன் பிரகாரம் மாகாண நிதியத்தில் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் திரண்ட நிதியம் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில் மாகண சபையின் சட்டமாக்கப்பட்ட 09 நிறுவனங்களுக்கு சொந்தமான ரூபா 4,482 மில்லியன் பெறுமதியான நிதியல்லாச் சொத்துக்கள் மற்றும் ரூபா 1,026 மில்லியன நிலையான வைப்பு மீதி காணப்பட்ட போதும் அப் பெறுமதி மாகாண நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.	மாகாண சபையின் நிறுவனங்களாக இருந்த போதிலும் மாகாண திறைசேரியினால் கட்டுநிதி விநியோகிக்கப்படாமையினால் நிதியக் கணக்கில் உள்ளடக்கப்படவில்லை.	கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	நிதியக் கணக்கின் பிரகாரம் மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் செலவினம் ரூபா 4,212 மில்லியன் ஆக இருந்த போதிலும் நிதியல்லாச் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,668 மில்லியன் ஆனமையால் ரூபா 2,544 மில்லியன் ஆன சொத்துக்கள் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	Transfer in கீழ் உள்ளடக்கப்படுகின்ற சகல சொத்துக்கள் தொடர்பான விபரங்களையும் உள்ளடக்கிய பதிவேடு உரிய நிறுவனத்தின் மூலம் பேணிச செல்லப்படுகின்றது.	சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.2.1 பொது அவதானிப்புக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்குரிய வருமானக் குறியீடு 32 இன் கீழ் வருமானங்கள் சேகரிக்கப்பட்டதுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் வருமானக் குறியீடு 15 இற்கு உரிய ரூபா 13,027 மில்லியன் நிலுவை வருமானம் காணப்பட்டது.	நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் அறவிடுவதற்கும் மற்றும் தொடர்ந்தும் அறவிட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.	நிலுவை வருமானத்தை அறவிடுதல் செயற்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் திணைக்களங்கள் 09 இல் காணப்பட்ட காணி, கட்டிடம், வாகனம் மற்றும் அலுவலக உபகரணங்களை உள்ளடக்கிய நிதியல்லாச் சொத்துக்கள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(இ)	அமைச்சு திணைக்களங்களை உள்ளடக்கிய 13 நிறுவனங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நட்ட இழப்பின் பெறுமதி ரூபா 136 மில்லியன் ஆக இருந்த போதிலும் நிதி விதி 54 இன் பிரகாரம் அப்பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் ரூபா 09 மில்லியன் பெறுமதியும், 10 வருடங்களுக்க மேற்பட்ட ரூபா 57 மில்லியன் பெறுமதியும் இதனிடையே காணப்பட்டது.	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்புக்களை ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 22 மில்லியன் பெறுமதியான காலாவதியான வைப்புக்களை ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிர்மாணங்கள் முடிவடையாத செயற்திட்டங்கள் காணப்படுகின்றமையால் அந்த வைப்புக்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றது.	காலாவதியான வைப்புக்களை ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உளள்க் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.5.1 தலைப்பு 100 – ஆளுநர்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய இலக்கம் PS/CSA/11-18 சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண ஆளநரின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்படுகின்ற ஆகக் கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 02 மற்றும் தேவையாயின் பாதுகாப்பு வாகனம் ஒன்றும் உரித்தாக இருந்த போதிலும் முன்னாள் ஆளுநருக்காக 04 வாகனங்கள் வழங்கி பாதுகாப்பு வாகனங்களை உள்ளடக்கி 03 வாகனங்களுக்காக எரிபொருள் படி வழங்கப்பட்டிருக்கும் போது ஆளுநர் தொடர்ச்சியாக பிரயாணம் செய்கின்ற ரேன்ஜ் ரோவர் ஜீப் வண்டி மாகாண சபைக் கட்டிடத்தில் மின்சார சக்தியைப் பயன்படுத்தி நாளாந்தம் வாகனத்தின் மின்கலத்தை வலுவாக்குவதற்காக (சாஜ் செய்தல்) மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக ஒரு வாகனத்திற்கு எரிபொருள் படி குறைக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே பாதுகாப்பு வாகனத்திற்கான எரிபொருள் ஆளுநர் செயலகத்தில் இருந்து வழங்குவதற்குப் பதிலாக அதற்காகப் படி ஒன்று ஆளுநருக்கு செலுத்தப்பட்டதுடன் அவ்வாறு செலுத்தப்பட்ட எரிபொருள் படி ரூபா 07 மில்லியன் ஆகும்.	03 வாகனங்களுக்காக மாத்திரம் எரிபொருள் படி வழங்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	முன்னாள் ஆளுநரின் பிரத்தியேக செயலாளராக, விமானப் படையின் தொடர்ச்சியான சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் விமான படையின்	குவன்-8100 வாகனம் மூலம் கௌரவ ஆளுநரின் பிரத்தியேக செயலாளரின் கடமைப்	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சேவையில் இருந்து விடுவிக்காமல் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவருக்கு விமானப் படையில் இருந்து இலக்கம் குவன் - 8100 உத்தியோகபூர்வ வாகனமாக வழங்கப்பட்டிருந்தது. எனினும் அவரால் ஆளுநரின் பிரத்தியேக செயலாளராக சேவையாற்றிய மொத்த கால எல்லையிலும் அந்த உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்தி மேல் மாகாண சபைக்கு வருகை தந்திருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரே ஒரு உத்தியோகத்தருக்கு ஒரே காலப் பகுதியில் 02 வாகனங்களில் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி செலுத்த முடியாதிருந்த போது 2016 மார்ச் 09 ஆந் திகதிய இலக்கம் 05/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் IV பிரிவிற்கு முரணாக ஆளுநர் அலுவலகத்தினாலும் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியாக ரூபா 6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய இலக்கம் பீஎஸ்எஸ்/பீஎஸ்ஏ/11-12 சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் மூலம் காண்பிக்கப்பட்ட முறையில் ஆளநரின் பிரத்தியேக உதவியாளர் / செயலாளருக்கு குறித்துரைத்த சம்பளம் மேல் மாகாண சபையில் இருந்து செலுத்துவதற்குப் பதிலாக மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர் விமானப் படைக்கு எந்த ஒரு சேவையும் ஆற்றாமல் மேற்கூறப்பட்ட பதவியின் சம்பளம் மற்றும் படிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.	பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான இயலுமை எதுவும் காணப்படவில்லை.	
(இ)	உத்தியோகத்தரின் உள்ளபடியான கடமை நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக நாளொன்றுக்கு கடமை நேரத்தில் 1 - 2½ மணித்தியாலம் ஆகக் கூடிய காலத்தில் நடைபெறுகின்ற ஆளுநர் அலுவலகத்தில் பல்வேறு வகையான 04 கூட்டங்களைப் பிரதிநிதிதுவப்படுத்தி அந்த அங்கத்தவராக செயற்பட்டமைக்காக 2019 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் மாதம் வரை கூட்டப்படியாக ரூபா 1.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.	உரிய படிகளைப் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மேல் மாகாண அரச சேவைக்குரிய பல்வேறு பதவிகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களாக இருந்ததுடன் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32(3) உப பிரிவில் குறிப்பிடப் பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	ராஜகிரிய ஜனஜய சிட்டி கட்டிடத்தின் 10 ஆவது மாடியில் மற்றும் 8 ஆவது மாடியிலும் சதுர அடி 12,048 அளவினை உடைய ஆளுநர் செயலகம் ஸ்தாபிப்பதற்காக இனங்காணப்பட்ட அதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 226 மில்லியன் தொகை உடன்படிக்கை இன்றி செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஆகக் குறைந்த வசதிகளின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சபை அலுவலகம் பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 2024 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 9.8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அதனால் செலுத்தப்பட்ட ஆரம்ப தொகையை மீண்டும் மீள அறவிடுவதற்கோ அல்லது ஆதனங்களைக் கையேற்பதற்கோ சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த கட்டிடத்திற்கு உரிய ஆரம்ப வரைபடம் அங்கீகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு உடனடியாக உடன்படிக்கை வரைவை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டை நகர ஆணையாளருக்கு பொறுப்பைக் கையளித்தல் மற்றும் ஜனஜய சிட்டி கட்டிடத்தில் இது வரையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அலுவலகம் வலையமைப்பு, மின்சாரம், பராமரிப்பு மற்றும் பொது வசதிகளுக்காக செலுத்துதல் தொடர்பாக இந்த அலுவலகத்திற்கு அதிகாரத்தைக் கையளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	நிதியினை மீள அறவிடுவதற்கோ அல்லது ஆதனங்களைக் கையேற்பதற்கோ சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2011 இன் 04 ஆம் இலக்க கூட்டுறவு சங்க (திருத்தப்பட்ட) கொள்கை விஞ்ஞாபனம் மற்றும் 1998 இன் 03 ஆம் இலக்க கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் 47(2) பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மற்றும் அதற்குரிய ஏனைய விடயங்களையும் விசாரணைக்கு உட்படுத்தி வ.்.ப களுத்துறை எஸ்காகார கூட்டுறவுச் சங்கத்தின் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக நடத்தப்பட்ட விசேட விசாரணைக் குழுவிற்காக தலைவரை உள்ளடக்கிய அங்கத்தவர்கள் இருவருக்காக 13 நாட்களுக்காக ரூபா 494,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த 13 நாட்களுக்காக வருகைகள் உறுதிப்படுத்தி வருகை கையொப்ப பதிவேடு அல்லது வருகைதந்த நாட்களை உறுதிப்படுத்துகின்ற விபரங்கள் (வெளியிடலைப் பெற்றுக் கொள்ளல்) கணக்காய்விற்கு சமரப்பிக்கப்படாது இருந்ததுடன் குழு தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மாத்திரம் வருகையை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	வருகைப் பதிவேடு பராமரிக்கப்படாதிருந்த போதும் சகல விசாரணைத் திகதியின் போதும் பெறப்பட்ட கூற்றுக்கள் இறுதியில் குழு தலைவரை உள்ளடக்கிய சகல அங்கத்தவர்களினாலும் உரிய சாட்சியாளர்களின் சான்றுகள் பெறப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது.	கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் போதியளவில் இல்லாமையினால் செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.2 தலைப்பு 101 – சபை செயலகம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் மேல் மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் மாகாண சபையின் தலைவருக்கு நிறைவேற்ற வேண்டிய குறித்துரைத்த கடமை நடவடிக்கைகள் காணப்படாது இருக்கும் போது 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரை சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2024 ஆம் ஆண்டில் தலைவர் 03 நாட்களும் பிரத்தேய செயலாளர் 03 நாட்களும் மாத்திரம் சபைக்கு வருகை தந்திருந்த போதிலும் எரிபொருள் படிக்காக ரூபா 03 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. சாதாரண அலுவலக நேரத்தில் அல்லாமல் வேலைக்காக மாத்திரம் மேலதிக நேரப் படி பெற முடியுமாக இருந்த போதிலும் சபை செயலிழந்து காணப்பட்ட காலமான 2019 மே முதல் 2024 திசெம்பர் வரையான காலத்திலும் மேலதிக நேரப் படியாக ரூபா 02 மில்லியன் தொகை சாரதிகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது.	அரசியல் அதிகாரத்தின் பதவிகளில் உள்ளவர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கை தொடர்பான கட்டுப்பாடு பேணிச் செல்வதற்காக சபை செயலாளரின் அதிகார எல்லையை விஞ்சி கௌரவ ஆளநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்தப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.	சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முறைமைகளில் உள்ள குறைபாடுகள், முறையற்ற கொடுப்பனவுகள் மற்றும் மோசடிகள் தொடர்பாக செயற்படுவதற்காக குழு ஒன்று நியமித்து கடமைக் காலத்தில் கூடப்பட்ட அந்த குழுக்களின் உத்தியோகத்தர்களுக்கு 2021 ஆம் ஆண்டு முதல் 2024 வரை ரூபா 7.1 மில்லியன் தொகை படியாக செலுத்தப்பட்டிருந்த போதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்ட பரிந்துரைகள் மற்றும் குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	குழுவினால் நிறுவனத்தின் குறைபாடுகளை இனங்கண்டு குறைபாடுகளை சரி செய்வதற்கு நிறுவனங்களுக்கு சரியான ஆலோசனை வழங்கப்பட்டதுடன் படிகளுக்காக ஆளநரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் கடமை நடவடிக்கைகள் மிகவும் வரையறையாகக் காணப்பட்ட போதும் தமது அலுவலகத்திற்கு வெளியே கடமை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்டு 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை முன்னாள் சபை செயலாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 214,500 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மாகாண சபையில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் தொடங்கப்பட்ட முன்னாள் செயலாளர் பிரயாண செலவினங்கள் பெற்றிருந்ததுடன் மாதாந்த மிகுதி வேலைக் குறிப்புக்கள் மற்றும் திருத்தப்பட்ட வேலைக் குறிப்புக்கள்	நிதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

அலுவலகத்திற்கு புறம்பான கடமை நடவடிக்கைகளுக்காக பிரயாணம் செய்த இடங்கள் மற்றும் கடமை நடவடிக்கைகள் தொடர்பான எந்த ஒரு சான்றுகளும் காணப்படாது இருந்ததுடன் மாதாந்தம் மிகுதி வேலை குறிப்புக்கள் அல்லது திருத்தப்பட்ட வேலைக் குறிப்புக்களும் பேணிச் செல்லப்படாது இருக்கும் போது கூட்டிணைந்த படி வழங்கப்பட்டிருந்தது.	சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. அதற்கு முன்னர் கணக்காய்வில் இவ்வாறான குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படாதிருந்தமையால் அதனை சரி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.5.3 தலைப்பு 102 – மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவர் 2021 ஆம் ஆண்டு முதல் ஆணைக்குழுக் கூட்டத் தடவைகளுக்காக பௌதீக ரீதியில் சமூகமளித்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதும் அங்கத்தவர்களின் பங்குபற்றலுக்காக எரிபொருள் படி மற்றும் சம்பளமாக ரூபா 2 மில்லியன் செலுத்தப் பட்டிருந்தது.	கணக்காய்வில் சுட்டிக்காட்டப் பட்ட பின்னர் 2023 யூலை மாதம் முதல் எரிபொருள் மற்றும் தொலைபேசிப் படிகள் செலுத்தனவு மேற்கொள்ளப்பட வில்லை.	மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.4 தலைப்பு இலக்கம் 103 - கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 2020/5 சுற்றறிக்கை மற்றும் அலுவலக ஏற்பாட்டுகள் கோரியும் 1.8 ஆம் பிரிவின் பிரகாரம் பதிற்கடமைக்காக நியமிக்கப் படுகின்ற பதவிக்காக கூட்டுறவு ஊழயர் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். அங்கீகாரம் இன்றி 2020 – 2024 காலப் பகுதியில் ம/ப கிழக்கு ஹேவாகம் கோரளையில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிறைவேற்று பதவிகள் 09 இற்காக பதிற்கடமை நியமனம் வழங்கப்பட்டு அதற்காகவும் பதிற்கடமைப் படி செலுத்தப்பட்டிருந்தது. சங்கத்தின் நிறைவேற்று பதவிகளுக்காக விண்ணப்பம் கோரி நிரந்தர பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு தொடர்பில் அச்சடிப்பது தொடர்பில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு கவனம் செலுத்தாது இருந்ததுடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீகாரம் இன்றி தொடர்ந்தும் சங்கங்களில் மேற்கொள்ளப்பட்ட பதிற்கடமை நியமனங்களை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் செலுத்துவதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து மீண்டும் அப்பணத்தை அறவிடுவதற்கோ அல்லது பொருத்தமான தீர்மானத்தை எடுப்பதற்கோ எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.5 தலைப்பு 104 – உள்ளூராட்சி, பொருளாதார மேம்படுத்தல், மின்வலு மற்றும் வலு சக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 முதல் 2024 வரையான காலத்தில் மாகாண சபை கலைக்கப்பட்டமையினால் பிரதம அமைச்சராக இல்லாதிருந்த பிரதம அமைச்சின் உத்தியோகபூர்வ வீட்டுக்கு பாதுகாப்பு சேவை வழங்கும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையினை பின்பற்றாமல் ரூபா 2 மில்லியன் தொகை பொருளாதார மேம்பாட்டு பணியகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.	பொருளாதார மேம்பாட்டு பணியகத்துடன் உடன்படிக்கை செய்து சேவை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் போட்டியாளர் கேள்வி கோருவதன் கீழ் சேவை பெற்றுக் கொள்ளப்படும்.	பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 07 மில்லியன் ஆன 07 செயற்திட்டங்களுக்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 02 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியை விஞ்சி 1½ வருடம் கடந்திருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் 07 மாதங்கள் வரையிலும் அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	செயற்திட்டத்திற்குப் பதிலாக ஏனைய செயற்திட்டங்களை நிறைவேற்றியமை, உடன்படிக்கை செய்த ஒப்பந்தகார்கள் செயற்திட்டத்தை நிறைவேற்றாமை, நீர் வழங்கல் சபைக்கு நிதி செலுத்தாமை, அங்கீகரிக்கப்பட்ட நிதி போதியளவில் காணப்படாமை, அதிக மழையினாலும் செயற்திட்டத்தை நிறைவேற்றுதல் தாமதம் அடைந்திருந்தது.	செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.5.1 பொருளாதார மேம்படுத்தல் பணியகம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பொருளாதார மேம்படுத்தல் பணியகத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வெஸ்வுறோ அச்சகத்தில் 2023 ஆகஸ்ட் 08 ஆந் திகதி நடைபெற்ற பௌதீக இருப்பு, நிறுவனத்தால் பராமரிக்கப்பட்ட களஞ்சிய பேரேடு, அலுவலக பத்திர பொழிப்பு (Job card) கொள்வனவுப் பொழிப்பு (Purchase Order summary) அடிப்படையாகக் கொண்டு 38 அச்சிடல் பொருட்கள் தொடர்பாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது ரூபா 42 மில்லியன் பெறுமதியான இருப்பு பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. வெஸ்வுறோ அச்சகத்தில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் இடம்பெற்ற பற்றாக்குறையின் ஒட்டு மொத்த பெறுமதி ரூபா 69 மில்லியன் ஆக இருந்தது என அதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழு அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருந்த	பிரதான சந்தேக நபரான முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் தடுப்புக் காவலில் சிறைச்சாலையில் விசாரணைப் பிரிவில் காணப்படுகின்றமை மற்றும் பணிப்பாளர் சபையினால் நட்ட இழப்பு குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு இழப்பு நட்டம் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு பிரதம செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	மோசடிக்கு தொடர்புடைய நபர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை விரைவாக எடுத்து நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துதல் வேண்டும்.

போதிலும் உள்ளபடியாக ஏற்பட்ட பற்றாக்குறையின் பெறுமதி மற்றும் அந்த மோசடிகள் தொடர்பான நபர்களை இனங்கண்டு சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்தது.

1.5.5.2 மேல் மாகாண சுற்றுலா சபை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஏத்துகால நீர் பூங்கா செயற்திட்டம் ரூபா 186 மில்லியன் செலவில் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்து சுற்றுலா சபைக்கு கையளித்து 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் சுற்றுலாவை கவர்ந்து வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான முறையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. 2022 மே 09 ஆந் திகதி நாட்டில் ஏற்பட்ட கலவர நிலைமையினைக் காரணமாகக் கொண்டு எந்த ஒரு தரப்பினராலும் ஏத்துகால நீர்ப் பூங்காவின் ஆதனங்களுக்கு ரூபா 03 மில்லியன் நட்டம் ஏற்படுத்தி 03 வருட காலம் கடந்திருந்த போதிலும் அந்த நட்டம் தொடர்பாக தேவையான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப் பட்டிருக்கவில்லை.	இந்த செயற்திட்டம் முன்னாள மேல் மாகாண வீதி அமைச்சர் ஊடாக நிர்மாணிக்கப்பட்டதாகவும் அதன் போது இந்த நீர்ப் பூங்காவை பேணிச் செல்வதற்கு வெளிதரப்பினருக்கு கூறுவிலை கோரி வழங்கப்பட்டிருந்ததுடன் அவரினால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை மீறியதன் காரணமாக வழக்கு தொடரப்பட்டு உரிய இழப்பீட்டுப் பணம் பெறப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கலவர நிலைமையின் அடிப்படையில் இதற்கு ஏற்பட்ட அதிக இழப்பு நிலைமையின் அடிப்படையில் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.	சுற்றுலாவை கவர்ந்து கொள்வதன் மூலம் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபையின் பொது முகாமையாளராக கடமை மேவுகை செய்வதற்காக உள்ளூராட்சி அமைச்சின் உத்தியோகத்தருக்கு 2022.01.01 ஆந் திகதி முதல் முற்திகதியிடப்பட்ட நியமனம் வழங்கப்பட்டிருந்தது. மேல்மாகாண சுற்றுலா சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2006/30 சுற்றறிக்கையின் பிரகாரம் பொது முகாமையாளர் பதவி மத்திய முகாமைத்துவ மட்டத்தில் (MM) பதவியாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதன்	பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மேல் மாகாணம், உள்ளூராட்சி செயலாளரால் பதிற்கடமை அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. சுற்றாடல் சபையின் செயற்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கும், சபையின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாகப் பேணிச் செல்வதற்காகவும் விசேட சேவை ஒன்று நிறைவேற்ற வேண்டிய இருந்த இந்த உத்தியோகத்தரின் நிர்வாகத்திற்கு புறம்பான விடயங்களின் காரணமாக இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருந்தது.	பதவிக்கு உரித்தல்லாத படிகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பிரகாரம் இந்த பதவிக்காக ஏனைய நிறுவனங்களில் சிரேஸ்ட நிறைவேற்று மட்டத்தில் (HM தொகுதியில்) பொது முகாமையாளர் பதவிக்கு உரித்தாகின்ற வரப்பிரசாதங்களான எரிபொருள் படி, போக்குவரத்துப் படி மற்றும் தொலைபேசிப் படி உரித்து இல்லாதிருந்த போதிலும் அமைச்சு செயலாளரின் தவறான அங்கீகாரத்தின் அடிப்படையில் 2023 செப்தெம்பர் முதல் 2025 மார்ச் வரை எரிபொருள், போக்குவரத்து மற்றும் தொலை பேசிப் படியாக ரூபா 2 மில்லியன் தொகை மேற்கூறப்பட்ட உத்தியோகத்தருக்கு முறையற்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தது.

1.5.5.3 கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) அதிகார சபையினால் எரிக்கக் கூடிய கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக கெரவலப்பிட்டி வலுக்கூடத்திற்கு கழிவுப் பொருட்கள் போக்குவரத்து கொண்டு செல்லப்பட்டதுடன் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அதற்காக எற்பட்ட செலவினம் முறையே ரூபா 74 மில்லியன் மற்றும் ரூபா 42 மில்லியன் ஆகும். எனினும் அந்த கழிவுப் பொருள் மீள் சுழற்சி செய்தல், உயிர் வாயு உற்பத்தி, மின்சார உற்பத்தி போன்ற செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தவறியிருந்தது. திறந்த வெளியில் கழிவுப் பொருட்கள் போடப்பட்டிருந்தமை, கூட்டுப்பசளை விடங்கள், மீள் சுழற்சி மற்றும் வலுசக்தி உற்பத்தி போன்ற தொழில்நுட்ப ரீதியான முறைமையின் மூலம் கழிவுப் பொருட்களை வளமாக்குவதற்கு உட்படுத்துவதற்கு தேவையான வெற்றிகரமான திட்டம் அமுல்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.	கழிவுப் பொருளின் மூலம் மின்சக்தி உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. கழிவுப் பொருள் முகாமைத்துவம் மூலம் தளங்களில் குவிக்கப்பட்டுள்ள கழிவுப் பொருள் மலை உயரத்தை குறைத்து சுற்றாடலுக்கு சாதகமான முறைமையில் ஈடுபடுத்துவதற்கு EOI விருப்பம் கோரி கேள்வி தார்கள் தெரிவு செய்து கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் Clean Sri Lanka இன் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் கூட்டுப் பசளைத் தளத்தின் இயலளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிறுவனத்தின் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	கொள்கை விஞ்ஞாபகத்தின் பிரகாரம் பணிப்பாளர் முழு நேர சேவையில் இருக்க வேண்டியிருந்த போதிலும் 2024 மே 10 ஆந் திகதி முதல் அதிகார சபையின் பணிப்பாளர் ஒழுக்காற்று பரிசோதனையின் கீழ் கடமை நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கடமை மேவுகை செய்வதற்கு பிரதிப் பணிப்பாளர் (தொழில் நுட்பம், செயற்பாடுகள் மற்றும் பயிற்சி) ஈடுபடுத்தப்பட்டதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் புறம்பாகவும் பிரதான அலுவலகத்தின் ஒப்பந்த / நாளாந்த அடிப்படையிலான பதவியணியினர்கள் 10 பேரும் வளம் முகாமைத்துவ நிலையத்திற்காக 67 பேரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும் பிரதான நோக்கம் மற்றும் இலக்குகள் ஆன விற்பனை செய்தல், தகவல் தொழில் நுட்பம் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை.	பணிப்பாளர் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் முழு நேர அடிப்படையில் சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. பதவியணியினர் மேம்பாட்டிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்திற்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.	நிறுவனத்தின் பதவிகளுக்கு ஆட்சேரப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

1.5.6 தலைப்பு 105 – சுகாதார, உள்நாட்டு மருத்துவம், சமுதாய நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, மகளிர் அலுவல்கள் மற்றும் சபை அலுவல்கள் அமைச்சு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பெறுமதி ரூபா 05 மில்லியன் செலவினை மேற்கொண்டு 2020 திசெம்பர் 18 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட Agras T16 மற்றும் Matric 300RTK என்ற ரோன் வானூர்தி இரண்டு முறையே கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையும் 34 சந்தர்ப்பங்கள் மற்றும் 130 சந்தர்ப்பத்தில் மாத்திரம் பயன் படுத்தப்பட்டதுடன் அந்த சொத்துக்கள் இரண்டும் குறைவாக பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக கவனம் செலுத்தாமல் தேவை தொடர்பாக உரிய சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமல் ரூபா 14 மில்லியன் செலவினத்தைச் செய்து மேலும் 02 ரோன் வானூர்திகள் 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு வானூர்தி 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 28 சந்தர்ப்பங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டதுடன் மற்றைய வானூர்தி 2024 ஆம் ஆண்டின் போது பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ரோன் வானூர்தி இரண்டிலிருந்தும் மாத்திரம் மேற்கொள்ளக் கூடிய பணிகளுக்காக மேலும் ரூபா 14 மில்லியன் விளைவற்ற செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	ரோன் வானூர்தி தேவை தொடர்ச்சியாக எழாதிருந்த போதிலும் அதிக மழையுடனான காலங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.	தேவையினை கவனத்தில் கொண்டு சொத்துக்கள் கொள்வனவு செய்ய வேண்டியிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட ரோன் வானூர்திகளில் இருந்து ஆகக் கூடிய பயன்பாட்டை பெறுதல் வேண்டும்.

1.5.7 தலைப்பு 106 – விவசாய, காணி, நீர்ப்பாசனம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார அமைச்சு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மேல் மாகாண நிதி விதி 383.3 (எ) வணிக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்குரிய ஏதாவது செலவு வைத்தல் ஒன்று ஏற்படுமாயின் மாகாண வருமானக் குறியீட்டில் செலவு வைக்க முடியுமாக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவிட வேண்டியிருந்த பல்லின விவசாய பூர்த்தி பொருள் முற்பணக் கணக்கின் கீழான ரூபா 24 மில்லியன் லங்கா உரக் கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய மீதி மாகாண சபையில் கிடைக்க வேண்டிய மீதியாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.	வணிக முற்பணக் கணக்கு கலைக்கப்பட்டுள்ளமையால் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் கடன் பட்டோர் மீதியொன்று காண்பிப்பதற்காக படிவங்கள் காணப்படாமையினால் இந்த நிலைமை ஏற்பட்டதுடன் எதிர் காலத்தில் ஆலோசனைகள் பெற்று கணக்குகளில் உள்ளடக்கப்படும்.	மாகாண சபைக்கு கிடைக்க வேண்டிய மீதியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.5.8 தலைப்பு 107 - வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு

1.5.8.1 மேல் மாகாணத்தின் பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் மத்திய சாரதி பயிற்சிப் பாடசாலைக்கு சாரதி ஆலோசனையாளர் பதவி, கனிஷ்ட அதிபர் பதவி மற்றும் அதிபர் பதவிகளுக்காக உரிய தகைமைகள் பூர்த்தி செய்துள்ள வெளி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்களை சேர்த்துக் கொள்வதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்காமல் இந்த பதவிகளுக்காக தகைமைகளை பூர்த்தி செய்யாதவர்கள் சேர்க்கப்பட்டு 2013 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் 2017 யூலை 03 ஆந் திகதி வரை உப அதிபர் பதவிக்காக ரூபா 2 மில்லியனும், 2017 யூலை முதல் 2024 திசெம்பர் வரை அதிபர் பதவிக்காக ரூபா 06 மில்லியனும் ஆக ரூபா 8 மில்லியன் சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது.	இந்த நிலைமையை சரி செய்து சகல ஆட்சேர்ப்புக்களையும் பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பப் பத்திரம் கோரி நடவடிக்கை எடுப்பதுடன் ஆலோசனையாளர்களுக்காக தேவையான ஆலோசனை அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சகல ஆட்சேர்ப்புக்களும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	2016 – 2024 காலப் பகுதியில் மேல் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபையின் மூலம் மேல் மாகாணத்தின் சாதாரண பேருந்து வழிகளில் ஓடுவதற்காக முன்னர் வழங்கப்பட்டிருந்த பேருந்துகளுக்காக வீதி அனுமதிப் பத்திரத்திற்குப் பதிலாக கேள்வி கோரல் மேற்கொள்ளப்படாமல் அதிவேக வீதியில் ஓடுவதற்காக 10 வீதி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் அதிவேக வீதியில் ஓடுகின்ற பேருந்துகளின் வீதி அனுமதிப் பத்திரம் கேள்வி கோராமல், பேருந்து வண்டிகளின் ஓட்டத்திற்கு வீதி	குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழு தீர்மானத்தின் அடிப்படையில் இந்த வீதி அனுமதிப் பத்திரங்களை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கேள்வி கோரி அனுமதிப் பத்திரம் வழங்கப்படல் வேண்டும்.

	அனுமதிப் பத்திரங்கள் 40 அளவில் வழங்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.		
(இ)	அதிகார சபையின் வீதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு சட்ட ரீதியாக மேல் மாகாண சபை எல்லையில் பிரயாணங்களில் ஈடுபடுகின்ற பேருந்து வழிகளில் பேருந்து வண்டிகள் ஓடுவதற்காக மாத்திரம் முடியுமாக இருந்த போதிலும் மேல் மாகாண எல்லைக்கு வெளியே தென் மாகாணத்திற்கு பிரயாணத்தில் ஈடுபடுகின்ற 10 பேருந்து வண்டிகளுக்காகவும் வடமேல் மாகாணத்தில் பிரயாணங்களில் ஈடுபடுகின்ற 02 பேருந்து வண்டிகளுக்காகவும் வீதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.	மாகாணங்கள் இரண்டிற்கு இடையே ஓட்டத்தில் ஈடுபட்டுள்ள பேருந்துகள் தொடர்பான விபரங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.	மாகாணங்களுக்கு இடையே அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஈ)	வீதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது 01 முதல் 03 வருடங்கள் வரை பேருந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது இருந்த சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக கண்டறிந்து உரிய நிபந்தனைகளின் பிரகாரம் வீதி அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்படாமல் பல வருட காலங்களுக்கு பின்னர் அந்த பேருந்து வண்டிகளுக்காக ஏனைய வீதிகளில் ஓட்டத்திற்காக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.	அனுமதிப் பத்திரம் குறித்துரைத்த காலப் பகுதியில் ஓட்டத்தில் ஈடுபடாமல் முடிவடைந்த பின்னர் நீடிக்க முடியாதிருக்குமாயின் அந்த இரத்துச் செய்யப்படுகின்ற மற்றும் காலாவதியான அனுமதிப் பத்திரங்கள் ஏனைய வீதிகளுக்காக திருத்தப்படவில்லை.	பேருந்து வண்டிகள் ஓட்டத்தில் ஈடுபடாது இருக்குமாயின் அது தொடர்பாக கண்டறிந்து உரிய நிபந்தனைகளின் பிரகாரம் வீதி அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	கேள்வி நடைமுறைகளுக்கு பொறுப்பாக கடவத்தை – பாணந்துறை (154/100) சாதாரண வீதியின் கீழ் அனுமதிப் பத்திரம் பெற்ற பேருந்து வண்டி கடவத்தை – மஹரகம அதிவேக வீதியில் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விசேட பிரயாண அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் முறையற்ற வகையில் ஓடுவதற்கு அதிகார சபையின் உயர் முகாமைத்துவமிடம் சந்தரப்பம் வழங்கியிருந்தது. இதன் பிரகாரம் கடவத்த – மகரகம அதிவேக வீதியில் வீதி அனுமதிப் பத்திரத் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 16 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டதுடன் 2018 – 2023 காலப் பகுதியில் அதிகார சபைக்கு ரூபா 26 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் 2023 ஆகஸ்ட் முதல் இந்த பேருந்து வண்டிக்காக முறையற்ற வகையில் அதிவேக வீதி இலக்கம் EX 02/138 கடவத்த – தெஹிவளை ஆக புதிய வீதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு எந்த ஒரு தொகையும் அறவிடாமல் புதிய அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.	விசேட பிரயாணங்களுக்கான பேருந்து ஈடுபடுத்துதல் 2023 ஆம் ஆண்டு முதல் நிறுவத்தப்பட்டுள்ளது.	இழக்கப்பட்ட வருமானத்தைக் கணிப்பிட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஊ)	2014 முதல் 2024 திசெம்பர் 31 வரையான காலப் பகுதிக்குரிய கேள்வி அனுமதிப் பத்திரக் கட்டணம் முழுமையாகச் செலுத்தப்படாத பேருந்து உரிமையாளர்கள் 253 பேர்களிடம் இருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரயாணிகள் சேவை போக்குவரத்து அனுமதிப் பத்திரம் கேள்வி கோரி பெற வேண்டியிருந்த வருமானம் ரூபா 44 மில்லியன் ஆக இருந்ததுடன் மேற்கூறப்பட்ட பெற வேண்டிய மீதியில் பேருந்து உரிமையாளர்கள் 105 பேர்களிடம் இருந்து 2014 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய ரூபா 23 மில்லியன் அறவிடப்படாதிருந்ததுடன் இந்த பணம் மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கோ அல்லது அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பெற வேண்டிய கேள்வி வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அறவிட வேண்டிய நிலுவை பணத்தை தாமதம் இன்றி அறவிடல் வேண்டும்.
(எ)	நிபந்தனையின் கீழ் உள்ளடக்கப்பட்ட 4.3 பிரிவின் பிரகாரம் கால எல்லையில் அங்கீகரிக்கப்பட்ட கேள்வித் தொகையில் 75 சதவீதம் அல்லது மிகுதி 25 சதவீதத் தொகை அல்லது அதில் ஒரு பகுதி செலுத்துதல் தெரிவு செய்யப்பட்ட அனுமதிப் பத்திர விண்ணப்பதாரர்கள் நிராகரிப்பார்களாயின் அல்லது புறக்கணிப்பாளர்களாயின் உரிய காலம் கடப்பதுடன் வீதி அனுமதிப் பத்திரம் கையளித்தல் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் அதற்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட அனுமதிப் பத்திரத்துக்கு உரிய இதுவரை செலுத்தப்பட்ட கேள்விக் கட்டணம் மற்றும் விண்ணப்ப பிணைகளை உள்ளடக்கிய சகல வைப்புப் பணமும் மீள செலுத்தப்படாது இருந்ததுடன் சகல நிதியும் அதிகார சபைக்கு கையேற்கப்படுவதாக குறிப்பிட்ட போதும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை.	சகல வைப்புப் பணமும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	நிபந்தனையின் கீழ் உள்ளடக்கப்பட்ட 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி கையளித்தல் கடிதம் அனுப்பிய திகதியில் இருந்து 60 நாட்களுக்குள் உடன்படிக்கை செய்து போக்குவரத்து சேவை அமுல்படுத்தப்படல் வேண்டும். அதன் பிரகாரம் முதலாவது கட்டத்தில் கையளிக்கப்பட்ட கையளித்தல் 2024 யூலை மாதம் 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் கேள்வி கையளித்தல் கடிதம் அனுப்பப்பட்ட திகதியில் இருந்து 60 நாட்கள் பூரணமான 2024 செப்தெம்பர் 24 ஆந் திகதி வரையிலும் 12 பேருந்து வண்டிகள் உரிய பிரகாரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் 12 பேருந்துகள் உரிய திகதியில் ஓட்டத்தில் ஈடுபடாது இருந்ததாகவும் 03 பேருந்து வண்டிகள் 2025 மார்ச் 11 ஆந் திகதி முதல் ஓட்டத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	குறித்துரைத்த திகதியில் ஓட்டத்திற்காக ஈடுபடுத்துதல் வேண்டும்.

(ஐ)	இரண்டாவது சுற்றில் கையளித்தல் 2024 ஆகஸ்ட் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் கேள்வி கையளித்தல் கடிதம் அனுப்பப்பட்ட திகதியில் இருந்து 60 நாட்கள் பூரணமாகின்ற 2024 ஒக்தோபர் 14 ஆந் திகதி வரையில் 03 பேருந்து வண்டிகள் உரிய பிரகாரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதுடன் 05 பேருந்து வண்டிகள் உரிய திகதியில் ஒட்டத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	குறித்துரைத்த திகதியில் ஓட்டத்திற்காக ஈடுபடுத்துதல் வேண்டும்.
(ஒ)	வீதி அனுமதிப் பத்திரத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் 43 திருத்தங்கள் தொடர்பாக பரிசோதனையின் போது திருத்தப்பட்ட மீதியின் மொத்த கேள்விப் பெறுமதி (இறுதி தடவையில் கேள்வி கோரப்பட்ட) ரூபா 46 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் திருத்தப்பட்ட 17 கேள்விகளின் பெறுமதி தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த திருத்தங்களுக்கு உரியதாக அறவிடப்பட்ட கட்டணங்களின் மொத்த கூட்டுமொத்தம் ரூபா 2 மில்லியன் ஆக இருந்ததுடன் ND 1343 என்ற பேருந்துக்கு உரிய வீதி திருத்துவதற்கு உரிய எந்த ஒரு கட்டணமும் அறவிடப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த திருத்தங்களின் காரணமாக பிரயாணிகள போக்குவரத்து அதிகார சபைக்கு அறவிடுவதற்குக் காணப்பட்ட அண்ணளவாக ரூபா 44 மில்லியன் தொகை இழக்கப்பட்டிருந்தது. மேலும் வீதி பேருந்து வீதிகளை இனங்காணும் போது, அந்த வீதிகளில் பிரயாண இடங்களை திருத்தும் போது பிரயாணிகளின் தேவை தொடர்பாக கவனத்தில் கொண்டு அதன் பிரகாரம் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான எந்த ஒரு ஆய்வும் மேற்கொள்ளாமல் முக்கியமாக பேருந்து நடத்துனர்களின் கோரிக்கையின் பிரகாரம் வீதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கும் போது பிரயாண இடங்கள் மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறான 15 சந்தர்ப்பங்கள் தெரிவு பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.	குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஓ)	பிரயாணிகள் பேருந்து வண்டி ஓட்டத்தில் நிறுத்தப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்டு ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்ட பேருந்து வண்டிகளை மீண்டும் ஓட்டத்தில் சேர்த்து பிரயாணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தை நாளதுவரையாக்கும் போது பழைய பேருந்து வண்டிகள் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதாயின் ரூபா 30,000 கட்டணமும் புதிய பேருந்து வண்டி ஒன்று ஈடுபடுத்தப்படும் ஆயின் ரூபா 60,000 கட்டணமும் அதிகார சபைக்கு அறவிட	06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்ட பேருந்து வண்டிகளை மீண்டும் ஓட்டத்தில் ஈடுபடுத்தும் போது ரூபா 30,000 தொகையும், அந்த பேருந்து வண்டிகள் திருத்தப்படுமாயின் ரூபா	அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தை தாமதம் இன்றி அறவிடல் வேண்டும்.

	வேண்டியிருந்த போதிலும் 2018 – 2024 திசெம்பர் 31 வரையான காலத்தில் ரூபா 4 மில்லியன் அறவிடப்படாமல் 182 பேருந்து வண்டிகள் ஓட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது.	60,000 தொகையும் அதிகார சபைக்கு செலுத்துதல் வேண்டும். அவ்வாறான தொகை ஒன்று அறவிடப்படாமல் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிரயாணிகள் சேவை அனுமதிப் பத்திரம் நீடிப்பதற்கோ அல்லது திருத்துவதற்கோ முடியாது இருந்தது.	
(ஔ)	2018 முதல் 2024 திசெம்பர் 31 காலப் பகுதியில் 102 அனுமதிப் பத்திர உரித்துக்கள் ஏனைய தரப்பினருக்கு கையளிக்கப்பட்டதுடன் அறவிட வேண்டிய கட்டணம் ஆன ரூபா 5 மில்லியன் அறவிடப்படாமல் அனுமதிப் பத்திர உரித்தை திருத்துவதற்கு அதிகார சபையின் முன்னாள் தலைவர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் (ஓட்டம்) இனால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	தற்போது உரித்து திருத்தல் கட்டணம் தவணையாக அறவிடுதல் கைவிடப்பட்டு ரூபா 100,000 உரித்து திருத்தக் கட்டணம் ஒரே தடவையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தை தாமதம் இன்றி அறவிடல் வேண்டும்.

1.5.8.2 வீதி அபிவிருத்தி அதிகார சபை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட 09 நிகழ்ச்சித் திட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கு உரிய 2010 ஆம் ஆண்டு முதல் அதிகார சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 299 மில்லியன் தொகை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.	மேலும் அறவிட வேண்டிய ரூபா 299 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	அறவிட வேண்டிய பணத்தை தாமதம் இன்றி அறவிடல் வேண்டும்.
(ஆ)	வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ரூபா 158 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 02 கொங்கிரிட் இயந்திரங்கள் மற்றும் ரூபா 06 மில்லியன் பெறுமதியான கேப்ர் இயந்திரம் தற்போது வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது.	வீதி காப்பட் இடும் செயற்திட்டத்திற்காக மாத்திரம் நிதியேற்பாடு கிடைக்கப் பெற்றமையால் கவனத்தில் கொள்ளக் கூடிய வேலை அளவு ஒன்று காணப்படாமையின் காரணமாக இந்த இயந்திரத்தை விற்றுத் தீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	விற்றுத் தீர்த்தல் குழுவின் மூலம் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	அதிகார சபையின் இயந்திரப் பொறியியலாளர் தொழிற்சாலைப் பொறுப்பில் காணப்பட்ட 83 இயந்திரங்களில் 19 இயந்திரங்கள் பழுது பார்க்க வேண்டிய நிலையில் காணப்பட்டதுடன் 25 இயந்திரங்கள் வேலை இன்றி பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் தரித்து	52 இயந்திரங்கள் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. 19 இயந்திரங்கள் பழுது பார்த்தல் நிலையில் காணப்படுவதுடன் 12 இயந்திரங்களை விற்றுத் தீர்மானிக்கப்பட்டு விசேட	இயந்திரம் மற்றும் மனித வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வைக்கப்பட்டிருந்தது. அஸ்கிரிய இயந்திரப் பொறியியலாளர் அலுவலகத்தில் 28 நிரந்தர ஊழியர்களும், ஒப்பந்த ஊழியர்கள் 07 பேர்களும் சேவையில் ஈடுபடுத்தி இருந்ததையும் உள்ளடக்கி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 35 பேர்கள் இருந்த போதும் இயந்திரம் மற்றும் வாகனங்கள் விளைவற்றுக் காணப்படுகின்றமையால் அந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடம் இருந்தும் ஆகக் கூடிய சேவை பெற்றுக் கொள்வதற்கு அதிகார சபைக்கு முடியாது இருந்தது.	செயற்திட்ட இயந்திர வேலைகளுக்காக இந்த ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.	

1.5.8.3 கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 யூன் மற்றும் யூலை மாதங்களில் அதிகார சபையால் எந்த ஒரு வைப்பு ஒன்று அல்லது பொறுப்பு உறுதிப்படுத்தல் ஒன்று பெற்றுக் கொள்ளப்படாமல் கொள்வனவாளர்கள் மூன்று பேர்களுக்கு ரூபா 19 மில்லியன் பெறுமதியான 31,200 ஜெக் மெக்கரல் ரின் ஒரே தடவையில் வழங்கப்பட்டதுடன் அதற்காக ரூபா 950,000 தொகை கிடைத்திருந்ததுடன் ரூபா 18 மில்லியன் பெறப்பட வேண்டியிருந்தது. அந்த கொள்வனவாளர் வழங்கிய காசோலை மதிப்பிழந்து இருந்ததுடன் ஏனைய கொள்வனவாளர்கள் காசோலைகளுக்காக பணம் செலுத்துதலை நிறுத்தி இருந்ததாக வங்கிக்கு ஆலோசனை வழங்கப்பட்டதுடன் மிகுதி கொள்வனவாளர்கள் காசோலை வழங்கிய பின்னர் வங்கிக் கணக்கை மூடியிருந்தன். அதன் பிரகாரம் கொள்வனவாளர்கள் மூன்று பேரும் வேண்டுமென்று மோசடியில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு பொறுப்புக்கள் இன்றி ஒரே தடவையில் சமன் ரின் 31,200 கடன் அடிப்படையில் வழங்குவதற்காக அங்கீகாரம் மற்றும் கட்டளை வழங்கிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பரிசோதனைகள் நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும், அதிகார சபைக்கு ஏற்பட்ட இந்த நட்டத்தை அறவிடுவதற்கோ அல்லது விற்பனை செய்யப்பட்டிருந்த செமன் ரின் இனை மீள பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் ஒரு மாத காலத்தின் போது பணமாக மாற்றப்படக் கூடிய இயலுமை காணப்படும் போது காசேலை பெற்று உடன்படிக்கையின் பிரகாரம் காப்புறுதி ஒன்று சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த நம்பிக்கை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	ஒரே தடவையில் 31,200 சமன் ரின்களை கடன் அடிப்படையில் வழங்குவதற்காக அங்கீகாரம் மற்றும் கட்டளை வழங்கிய உத்தியோகத்தர் தொடர்பாக விசாரணை நடாத்தி சட்ட ரீதியான நடவடிக்கை தாமதம் இன்றி எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	2022 முதல் 2024 வரையான காலப் பகுதியில் விவசாய உற்பத்தி தயாரித்தல் செயற்திட்டத்திற்காக ரூபா 30 மில்லியனும், ரின் மீன் தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 105 மில்லியனும், களஞ்சிய மற்றும் அலுவலக கட்டிடம் நிர்மானிப்பதற்காக ரூபா 81 மில்லியனுமாக மாகாண வீதி போக்குவரத்து அமைச்சு ஊடாக கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 216 மில்லியன் நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2024 மார்ச் மாத இறுதி வரையில் ரூபா 214 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 135 மில்லியன், கடன் தொகையாக அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது அந்த கடன் தீர்த்து வைக்கப் பட்டிருக்கவில்லை. ரின் மீன் தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 105 மில்லியன் தொகை 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது ஒரே தடவையில் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்தல் 2023 திசெம்பர் வரை தாமதம் அடைந்திருந்ததுடன் செயற்திட்டப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் அதில் ரூபா 25 மில்லியன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.	உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு தாமதமடைவதற்கு பிரதான காரணமாக ளுடுளு பெற்றுக் கொள்ளல் தாமதம் அடைந்திருந்தது. அது வரையில் வங்கி முறைமையில் வைப்பிற்காக ஆகக் கூடிய வட்டி வருமானத்தை பெறக் கூடிய காலம் இருந்தமையினால் செயற்திட்டத்திற்குரிய நிதியேற்பாடு கௌரவ ஆளநரின் விசேட அங்கீகாரத்துடன் செயற்திட்டத்தின் தேவையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் நோக்கில் குறுங்கால நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்து வட்டி வருமானமும் உழைக்கப்பட்டிருந்தது.	செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட பணம் அந்தப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டியிருந்ததுடன் கடன் தொகையை மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மரக் கைத்தொழிலாளர்களின் மரப் பொருட்களை பூர்த்தி செய்து தயாரிக்கும் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் வருமானத்தை உழைக்கும் நோக்காகக் கொண்டு 2013 ஆம் ஆண்டின் போது தெல்த ரமர நிலையைத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 2.5 மில்லியனும், இயந்திரப் பொறிமுறைகளுக்காக ரூபா 256,857 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2.8 மில்லியன் அதிகார சபையால் செலவிடப்பட்டிருந்தது. உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியில் இருந்து இந்த மர நிலையத்தின் மூலம் வாடகை வருமானம் தவிர எந்த ஒரு வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.	நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையின் அடிப்படையில் அரசாங்க ஊழியர்கள் செலுத்தும் அடிப்படையில் மரத் தளபாடப் பொருட்களை பெற்றுக் கொள்ளாதிருந்ததுடன் நிலையம் தற்போது அதிகார சபைக்கு வருமானம் உழைக்கும் நிலையம் ஒன்றாக பேணிச் செல்லப்படுகின்றது.	எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் நிலையம் பேணப்படல் வேண்டும்.
(ஈ)	பல்பிட்ட மீன் கைத்தொழிற்சாலை வளவில் ரூபா 30 மில்லியன் செலவில் நிர்மானிக்கப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு கூடம் ஒன்றை நிர்மானிக்கும் நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்து இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த	தற்போது அது பயன் பாட்டிற்கு எடுக்கக் கூடிய வகையில் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர் வரும் உற்பத்தி நடவடிக்கைகளின் போது	சுத்திகரிப்புக் கூட உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற கழி பௌசருக்காக செலவிடப்படும் தொகையை

	போதும் 2025 மே மாதம் வரையிலும் அது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது மீன் கைத்தொழில் சாலையில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக கலி பௌசர் சேவைக்காக ரூபா 1 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது.	பயன்பாட்டிற்கு எடுக்கப்படும்.	நிறுத்துதல் வேண்டும்.
(உ)	அரசாங்கத்தால் புதிய நிர்மாணங்களை தாமதப்படுத்துவதற்கும், கைவிடப்பட்டிருக்கும் போது மிகிலத் செயற்திட்டம் இரண்டிற்காக ரின் மீன் உற்பத்தி செய்யும் கைத்தொழிற்சாலை கட்டிடம் நிர்மாணித்தல், பொதியிடல் பொருட் களஞ்சியம் நிர்மாணித்தல், கழிவு நீர் சுத்திகரிப்புக் கூடம் ஒன்றை நிர்மாணித்தல், உள்ளக வீதிகளுக்கு தார் இடல், சூரியகல முறைமையினை பொருத்துதல், வாகன தளத்தை நிர்மாணித்தல், வெதுப்பக அறை ஒன்றை நிர்மாணித்தலை உள்ளடக்கிய புதிய நிர்மாணத்திற்காக ரூபா 180 மில்லியனையும் உள்ளடக்கி 2020 – 2024 காலப் பகுதியில் செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 417 மில்லியன் ஆகும். எனினும் செயற்திட்டத்தின் உற்பத்திக் கிரயம் அதிகரித்தமை, சந்தையில் எதிர்வு கூறல், விற்பனைத் திட்டம் இன்றி உற்பத்தி செய்தமை, உற்பத்தியை விற்பனை செய்து கொள்ள முடியாமையினால் கணிசமான அளவில் உற்பத்தி காலாவதியாகியமை, கிரயத்தினை விட குறைந்த விலையில் பொருள் இருப்புக்கள் விற்பனை செய்தல், உற்பத்தி விற்பனை கடன் அறவிடப்படாமை போன்றவற்றின் காரணமாக மீளாய்வாண்டு வரையில் செயற்திட்டம் ரூபா 51 மில்லியன் நட்டம் அறிக்கையிட்டு நட்ட நிலைமைக்கு உட்பட்டிருந்தது. மேலும் மொத்த விற்பனை ரூபா 39 மில்லியனில் ரூபா 27 மில்லியன் அறவிப்படாமல் காணப்படுகின்றமை அல்லது அறவிடுவதற்கு முடியாத கடன் மீதியாகும்.	சகல பணிகளும் செயற்திட்டத்தை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய வேலைப் பகுதிகளாக இருந்தமையால் இந்த 02 செயற்திட்டங்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக எந்த ஒரு விளம்பர நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாது இருந்தமை, அதற்காக செலவினங்களைச் செய்வதற்கு நிதியேற்பாடு கிடைக்காமல், விற்பனைத் துறைகளில் உயர்ந்த ஆகக் கூடிய அனுபவம் மற்றும் செயற்திறன் உள்ள முகாமையாளர்களின் சேவை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தமை மேலும் தற்போது ஒழுங்குமுறையாக அறவிடும் செயற்திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அறவிடல் நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மிகிலக் விவசாய உற்பத்தி தயாரிக்கும் செயற்திட்டம் மற்றும் ரின்மீன் தயாரிக்கும் செயற்திட்டம் மிகவும் இலாபகரமான செயற்திட்டம் ஒன்றாக நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.8.4 கூட்டுறவு நிதியம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
1973 இன் கூட்டுறவு விதிக் கோவையின் 43 (i) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதியம் கூட்டுறவுக் கல்வி, செயற்திட்டம் மற்றும் விளம்பர வேலைகள், கூட்டுறவுச் சங்கங்களின்	சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு இணங்க மாத்திரம் கூட்டுறவு நிதியத்தின் நிதி	நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக செலவினங்கள்

முகாமைத்துவத்தை செயற்திறனாக அபிவிருத்தி செய்தல், கூட்டுறவு சங்கங்களுக்கு உதவி வழங்குவதற்காக ஈடுபடுத்த முடியுமாக இருந்த போதிலும் 2011 முதல் 2024 காலப் பகுதியில் அதற்கு முரணான பணிகளுக்காக ரூபா 55 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.	ஈடுபடுத்தப்படுகின்றது.	செய்யாது இருத்தல் வேண்டும்.

1.5.8.5 கூட்டுறவு கலைத்தல் நிதியம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் போது கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட 66 சங்கங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது 07 சங்கங்களின் கலைக்கும் நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மூன்று மாவட்டங்களுக்கு உரிய மேலும் கலைக்க வேண்டிய கலைத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத 59 சங்கங்கள் காணப்பட்டது.	2024 ஆம் ஆண்டில் கலைத்தல் பூர்த்தி செய்யப்பட்ட 07 சங்கங்களும் 2025 பெப்ரவரி மாதம் கலைத்தல் பூர்த்தி செய்யப்பட்ட 04 சங்கங்களும் ஆக 11 சங்கங்கள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிப்பதற்காக அரசாங்கத்தின் அச்சகருக்கு அனுப்பப்பட்டுள்ளது.	எஞ்சியுள்ள கலைக்கும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளல் வேண்டும்.

1.5.9 தலைப்பு 108 – கல்வி கலாசார மற்றும் கலை அலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொல்வத்த விளையாட்டுக் கல்லூரியில் மூன்று மாடிக் கட்டிடம் நிர்மானிக்கும் செயற்திட்டத்தின் V ஆம் கட்டத்தின் கீழ் அமைச்சின் நிதியேற்பாட்டை பயன்படுத்தி ரூபா 33 மில்லியன் செலவில் 2023 செப்தெம்பர் 18 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு ரூபா 34,712 ஆரம்பித்தல் செலவினம் செய்யப்பட்டு கட்டிடத்தின் இரண்டாவது மாடி திறக்கப்பட்டிருந்தது. எனினும் விடுதி வசதிகள் வழங்குவதற்கு தேவையான அறை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு முடியாமையின் காரணமாக 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் விளைவற்றுக் காணப்பட்டது.	விடுதி வசதிகளுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல் தாமதம் அடைந்ததன் அடிப்படையில் தற்காலிகமாக தாமதம் ஏற்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதும் நிதியேற்பாடு வழங்கப்படவில்லை.	கட்டிடத்தில் இருந்து ஆகக் கூடிய பயன்பாட்டைப் பெற்றக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மினுவாங்கொட ரெஜிரணதுங்க மாதிரி ஆரம்ப பாடசாலையில் நீச்சல் தடாகத்தை நிர்மாணிக்கும் பணிகள் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உடன்படிக்கை இன்றி கையளிக்கப்பட்டு 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதி செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தின் போது நீச்சல் தடாகத்திற்காக டைல் கொள்வனவு செய்தல் மற்றும் டைல் பதித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக ரூபா 05 மில்லியன் செலவினம்	இது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழு அறிக்கையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	நீச்சல் தடாகத்தை செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்துரைத்த திட்டத்திற்கும் உரிய நியமத்தின் பிரகாரம் டைல் பதிக்காமை, டைல் பதிக்கப்பட்டு நீண்ட காலம் எடுத்தமை, செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நீச்சல் தடாகத்தை பயன்பாட்டிற்கு எடுக்காமை போன்றவற்றின் காரணமாக தடாகத்தின் டைல் கழன்று உடைந்த நிலையில் காணப்பட்டு சகல டைல்களும் முழுமையாகப் பயன்பாட்டு பொருத்தமற்ற நிலைக்கு உட்பட்டிருந்தது. நீச்சல் தடாகத்தின் மிகுதி வேலை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக செயற்திட்டத்தில் தற்போது காணப்படுகின்ற மதிப்பீடு மற்றும் ஏனைய பிரச்சனைகள் மற்றும் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை கண்டறிதல் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசேட குழுவிற்கு அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய மிகுதி நடவடிக்கைகளை தீர்மானிக்க முடியாதிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 05 கட்டங்களின் கீழ் ரூபா 187 மில்லியன் செலவிடப்பட்டிருந்த நீச்சல் தடாகத்தை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நீச்சல் தடாகத்தை பயன்பாட்டுக்கு எடுக்க முடியாதிருந்தது.		
(இ)	2023 ஆம் ஆண்டில் வேலை ஆரம்பிக்கப்பட்ட மேமா/களு/சிசுவிரு வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலை நடவடிக்கைகளை பூர்த்தி செய்யும் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபா 215 மில்லியன் ஆக இருந்ததுடன் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ரூபா 167 மில்லியன் ஒப்பந்த தொகைக்கு தனியார் ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 50 மில்லியன் நிதியேற்பாடு அங்கீகரிக்கப் பட்டிருந்தது. வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் செயற்திட்டமாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அமுல்படுத்தப்பட்டிருந்த செயற் திட்டத்தின் கட்டமைப்புத் திட்டங்களில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக செயற்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிக்காக ரூபா 30 மில்லியன் தொகை ஒன்று 2024 ஏப்ரல் 18 ஆந் திகதி செலுத்தப் பட்டிருந்ததுடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தை விஞ்சியிருந்த போதிலும் பௌதீக செயல் முன்னேற்றம் 40 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.	நிர்மாணிக்கின்ற சந்தரப்பங்களின் கட்டிடத்தின் அத்திவார கட்டமைப்பு திட்டங்களில் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டமைய ால் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் இருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது.	மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் இருந்து உரிய அறிக்கை பெற்று செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஈ) பாணந்துறை சிசுவிரு வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மானிப்பதற்கான செயற்திட்டம் Desing and Build ஆக கல்வி அமைச்சு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் ரூபா 27 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியில் உடன்படிக்கை செய்திருந்ததுடன் அதன் மேற்பார்வை நடவடிக்கைகள் மாத்திரம் பிரதேச பொறியியலாளர் பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்குரிய கட்டமைப்பு திட்டங்கள் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வெளி பொறியியலாளர்களால் நிறைவேற்றப்பட்டிருந்தது. கட்டிடத்தின் கட்டமைப்பு மற்றும் கட்டிடக் கலைத் திட்டத்தின் பிரகாரம் கட்டிடத்திற்குப் பயன்படுத்தப்பட்ட அத்திவார அளவு போதியளவில் இல்லாது இருந்தமை இனங்காணப்பட்டதன் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் இருந்து தொழில் நுட்ப ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்தின் வேலைகளட 02 வருடங்கள் அளவில் தாமதம் அடைந்து இருந்ததுடன் செயற்திட்டத்தின் மேற்பார்வை செய்யும் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகளின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த ரூபா 18 மில்லியன் ஆன முதலாவது பட்டியல் மற்றும ரூபா 27 மில்லியன் ஆன இரண்டாவது பட்டிடயலுக்காக கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்திற்கு உரிய பணிகள் குறித்துரைத் நியமத்தின் பிரகாரம் நிறைவேற்றப்படாது இருக்கும் போது பிரதேச பொறியியலாளரால் மேற்கூறப்பட்ட கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.	Desing calculation உரிய நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட பின்னர் அது பிரதான அலுவலகத்தினால் பரீட்சித்த போது Foundation போதியளவு இல்லாது இருந்தமை வெளிப்படுத்தப்பட்ட பின்னர் நிர்மானங்கள் நிறுத்தப்பட்டிருந்தது.	குறைபாடுகளை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.9.1 மேல் மாகாண தகவல் தொழில் நுட்ப வள அபிவிருத்தி அதிகார சபை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தகவல் தொழில் நுட்ப வள அதிகார சபை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் மாகாண சபையின் சேவைகளை செயற்திறனாக முன்னேற்றுவதற்கான மென்பொருள் முறைமை ஒன்றை ஸ்தாபித்தல் பிரதான நோக்கமாக நிறைவேற்றப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் அதிகார சபையினால் பல்வேறு உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பெறுமதி ரூபா 3.7 மில்லியன் ஆன தகவல் தொழில் நுட்ப சேவைப் பணிகள் யாவும் போதியளவான மனித மற்றும் பௌதீக மற்றும் தொழில் நுட்ப வளம் காணப்படாமையின் காரணமாக உப	வலுவான நிதி அடிப்படையில் அல்லது போதியளவான பதவியணியினர் காணப்படாமையினால் மென் பொருள் தீர்வை ஸ்தாபிப்பதில் பிரச்சனை ஏற்பட்டிருந்தது.	நிறுவனத்தின் அடிப்படை நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பந்தத்திற்கு வழங்குவதன் நிறைவேற்றப்பட்டிருந்தது.

1.5.9.2 மேல் மாகாண அழகு விடுதி கட்டுப்பாட்டு அதிகார சபை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மேல் மாகாண அழகு விடுதியின் அடிப்படை வருமான மூலமான திரையரங்க சேவை பிரதான கலையரங்கு மண்டபத்தை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளுக்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 241 மில்லியன் மொத்த மதிப்பீடு குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் 2024 நவம்பர் 07 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கோ அல்லது பொருத்தமான ஒப்பந்த நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்கோ மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை தவறியிருந்தது.	மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து தகவல்கள் பெறுதல் பொருத்தமானதாகும்.	மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விரைவாகப் பூர்த்தி செய்து கொள்வதற்கு உயர் முகாமைத்துவம் பங்குபற்றுதல் வேண்டும்.
(ஆ)	மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக அமுல்படுத்தப்பட்ட விடுதிகளில் திறந்த கலையரங்கத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக அமைச்சு நிதியேற்பாடு ரூபா 38.8 மில்லியன் தொகை 2024 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டதுடன் அதற்காக நேர் ஒப்பந்த கையளித்தல் முறையின் கீழ் ஒப்பந்த நிறுவனம் மற்றும் சங்கத்துடன் ரூபா 3.7 மில்லியன் மற்றும் மாகாண வீதி அதிகார சபையால் நேரடியாக ரூபா 1.6 மில்லியன் செலவினம் செய்யப்பட்டதன் பின்னர் செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ஆரம்ப நிர்மாணங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து தகவல்கள் பெறுதல் பொருத்தமானதாகும்.	மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து கொள்வதற்கு உயர் முகாமைத்துவம் பங்கு பற்றுதல் வேண்டும்.

1.5.10 தலைப்பு 109 – பிரதம செயலகம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உதவி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) ஆக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தருக்கு பட்டத்தின் படிப்பை பெற்றுக் கொள்வதற்காக ஜப்பானுக்கு செல்வதற்கு 02 வருட காலம் மற்றும் மீண்டும் கலாநிதி பட்டத்திற்காக 03 வருட காலத்திற்காக சம்பளதுடன் விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் முதலாவது பிணை முறியின் பிரகாரம் 09 வருடம் கட்டாய சேவைக் காலம் ஒன்று சேவையாற்றியிருந்தமை	அறவிட வேண்டிய மொத்த தொகை தொடர்பாக இதுவரை பிணையாளர்களிடம் இருந்து அறவிடுதல் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	ஒப்பந்தத்தின் நிபந்தனையின் பிரகாரம் பணம் அறவிடப்படல் வேண்டும்.

	இணங்கப்பட்டிருந்த போதிலும் 02 வருடங்களும் ஒரு மாதம் மாத்திரம் சேவையாற்றி இருந்ததுடன் இரண்டாவது பிணைமுறியின் பிரகாரம் கட்டாய சேவைக் காலம் 10 வருடங்களுக்காக இணக்கம் தெரிவிக்கப்பட்ட போதிலும் அங்கீகாரம் இன்றி வெளிநாடு சென்றிருந்தால். கட்டாய சேவைக்காலம் பூரத்தி செய்யாமல் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறியதால் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கோ அவ்வாறு இல்லையாயின் பிணைமுறியில் குறிப்பிடப்பட்ட பிணையாளரிடம் இருந்து அறவிடுவதற்கோ உரிய அல்லது சட்ட ரீதியான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	2021 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 13/2008(VI) என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண பிரதம செயலாளருக்காக மாதம் ஒன்றுக்கு எரிபொருள் லீற்றர் 220 மற்றும் மேலதிக செயலாளர் அல்லது அதற்கு சமமான உத்தியோகத்தருக்கு மாதத்திற்கு அனுமதிக்கப்பட்ட எரிபொருள் அளவு லீற்றல் 165 சமமான எரிபொருள் படி ஒன்று மாத்திரம் அங்கீகரிக்கப் பட்டிருக்கும் போது மற்றும் உத்தியோகத்தருக்கு மேலதிக எரிபொருள் தேவையாயின் அதற்காக உரிய சுற்றறிக்கையின் மூலம் நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கும் போது ஆளுநர் அங்கீகாரத்தின் அடிப்படையில் பிரதம செயலாளருக்காக எரிபொருள் லீற்றர் 100 இனாலும், ஏனைய உத்தியோகத்தர் களுக்காக எரிபொருள் லீற்றர் 50 இனாலும் எரிபொருள் எல்லையை விஞ்சி மேலதிகமாக 41 உத்தியோகத்தர் களுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை ரூபா 18 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.	அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு உரித்தான எரிபொருள் அளவிற்கு மேலதிகமாக கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக எரிபொருள் அளவிற்காக படி வழங்கப்பட்டுள்ளது.	மாதாந்தம் பிரயாணம் செய்த தூரம், தேவையான எரிபொருள் அளவு தொடர்பாக ஆய்வு செய்து மேலதிக எரிபொருள் அங்கீகரித்தல் வேண்டும்.
(இ)(i)	2014 சனவரி 01 ஆந் திகதிய இலக்கம் 01/2014 என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 2.1.3 (II) பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்காக எரிபொருள் படி வழங்கும் போது உரிய மாதத்தில் முதலாவது திகதியை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வெளியிடப்பட்ட சராசரி பெற்றோல் மற்றும் டீசல் விலைகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் மாகாண	கௌரவ ஆளநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சபையின் 61 உத்தியோகத்தர்களுக்காக 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை சுப்பர் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசல் என்ற அடிப்படையில் எரிபொருள் படியாக ரூபா 10 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.		
(ii)	நாட்டில் காணப்படுகின்ற சவாலான பொருளாதார நெருக்கடியில் சிக்கனமாக அரசாங்கத்தின் செலவினங்களைச் செய்வதற்கும், செலவினங்களைக் குறைப்பதற்கும் வெளிப்படுத்தி 2024 சனவரி 10 ஆந் திகதி இலக்கம் 01/2024 என்ற வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்கு இணங்காத வகையில் மேல் மாகாண பிரதம செயலாளரின் நிதிச் சுற்றறிக்கை 04/2024 இன் மூலம் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் படிக் கணிப்பிடும் போது லங்கா பெற்றோல் 95 பயன்படுத்தியதாக குறிப்பிட்டு வாகனங்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளக் கூடிய திட்ட முறைமை ஒன்று உறுதிப்படுத்தியதன் பின்னர் அந்த வாகனத்திற்காக லங்கா பெற்றோல் 95 ஒக்தோன் மற்றும் லங்கா சுப்பிரி டீசல் பயன்படுத்துவதற்கு மேல் மாகாண கௌரவ ஆளுநரின் விசேட அங்கீகாரம் பெற்று அந்த எரிபொருள் வகை வாகனத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக உரிய உத்தியோகத்தர்கள் கவனிக்க வேண்டியதாக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறி மாகாண சபையின் எரிபொருள் படி பெற்ற உத்தியோக்த்தர்களுக்கு சாதகமான வகையில் சுற்றறிக்கை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	உரிய வாகனத்திற்காக முகவர் நிறுவனத்தில் இருந்து பயன்படுத்த வேண்டிய எரிபொருள் தொடர்பாக உறுதிப்படுத்தல் பெற்ற பின்னர் நிதி சுற்றறிக்கை இலக்கம் 2024/04 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ ஆளுநரின் முன் அங்கீகாரத்தின் அடிப்படையில் எரிபொருள் படி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியம், ஆரம்ப சுகாதார சேவைகள் முறைமைகளை வலுப்படுத்தும் செயற்திட்டம், பிரமாண அடிப்படையிலான மானியம், பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் மற்றும் பாடசாலை போசணை நிகழ்ச்சித் திட்டமாக 05 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியில் இருந்து ரூபா 4,490 மில்லியன் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. அந்த தொகையில் மாகாண சபையின் நிறுவனங்களுக்கு ரூபா 4,274 மில்லியன் கட்டுநிதியாக விடுவிக்கப்பட்டதுடன் அந்த நிறுவனங்காளால் ஆண்டின் இறுதியில் அந்த வேலை அட்டவணைக்கு உரிய செயற்திட்டங்களுக்காக செலவினங்கள்	பதிலளிக்கப்பட வில்லை.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் குறித்துரைத்த பணத்தை தேவையான நேரத்தில் விடுவிக்க வேண்டியிருந்ததுடன் சகல நிதி ஏற்பாடுகளும் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	செய்யப்படாமல் மீண்டும் நிதியத்திற்கு ரூபா 319 மில்லியன் தொகைக்கு தீர்க்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டின் இறுதியில் மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 535 மில்லியன் கட்டுநிதி மீதி செயற்பாடற்ற மீதி ஒன்று காணப்பட்டதுடன் மத்திய அரசாங்கம் எதிர்பார்த்த நிகழ்ச்சித் திட்டம் குறித்துரைத்த பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த தொகை 2024 ஆம் ஆண்டின் போது செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.		
(உ)	பழைய மேல் மாகாண சபைக் கட்டிடத்தின் தரை மாடியில் சதுர அடி 2500 அண்ணளவான இட அளவு அலுவலகத்திற்காக பயன்படுத்த முடியாதிருந்த பிரகாரம் வெஸ்புறு பாதுகாப்பு சேவையின் உத்தியோகத்தர்கள் தங்குவதற்காக பயன்படுத்தப்பட்டதுடன் அந்த உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்ட மின்சாரம், நீர் மற்றும் ஏனைய வசதிகளுக்காக எந்த ஒரு தொகையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பாதுகாப்பு சேவை வழங்கியதற்காக வருடாந்தம் ரூபா 49 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை செலவிடப்பட்டதுடன் பாதுகாப்பு சேவைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களின் தங்குமிட வசதிகளை வழங்கும் பொறுப்பு பொருளாதார மேம்படுத்தல் பணியகத்திற்கு வழங்க வேண்டியிருந்த போதும் அதற்குப் புறம்பாக மாகாண சபைக் கட்டிடத்தில் ஒரு பகுதி சில வருடங்களாக நிதி செலுத்தாமல் பயன் படுத்தபட்டதன் அடிப்படையில் மாகாண சபையின் சில அலுவலகங்கள் கணிசமான வாடகை ஒன்றை செலுத்தி பத்தரமுல்லைக்கு அண்மையில் நடாத்திச் செல்ல வேண்டி ஏற்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் பாதுகாப்பு சேவைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தரை மாடியை மிகவும் பயனுள்ள வகையில் பயன் படுத்துதல் வேண்டும்.
(ஊ)	தேசிய விழாவாக வருடாந்த மதிப்பீடுகளில் குறித்துரைத்த ரீதியில் குறிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட பணிகள் தவிர ஏனைய விழாக்கள், நட்பு கூட்டங்கள், கண்காட்சிகள், கருத்தரங்குகள், திறந்த மாநாடுகள் போன்றவற்றுக்காக அரசாங்க நிதியம் பயன்படுத்த முடியாதிருந்தமை 2024 சனவரி 10 ஆந் திகதி இலக்கம் 01/2024 என்ற மாகாண பிரதம செயலாளருக்கு	அந்த செயற்திட்டத்திற்குரிய சகல நடவடிக்கைகளும் கல்வி அமைச்சின் செலவினத் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	அரசாங்கத்தின் நிதி முறையற்ற வகையில் பயன்படுத்தாது இருத்தல் வேண்டும்.

	முகவரியிடப்பட்ட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் போதும் மற்றும் மாகாண சபையில் முன்னுரிமை வழங்க வேண்டிய ஏனைய அபிவிருத்திப் பணிகள் அனேகமாகக் காணப்படும் போது அவற்றை அமுல்படுத்துவதற்கு முன்னருமே வழங்கப்படாமல் மகர – கடவத்த பொசன் விழா மற்றும் வெசக் வலயத்திற்கா ரூபா 14 மில்லியன் தொகை மாகாண சபையின் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.		
(எ)	2019 மார்ச் 29 ஆந் திகதி இலக்கம் PS/PCMD/SD/01/08 என்ற சனாதிபதி செயலாளரின் 09 மாகாணங்களிடம் ஆளுநருக்கு முகவரி இட்ட கடிதத்தின் பிரகாரம் அமைச்சரவையின் கட்டளையின் பிரகாரம் மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களுக்காக சம்பளத்துக்க மேலதிகமாக செலுத்தப்படுகின்ற படிகளைத் தீர்மானிக்கும் போது தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவினதும் நிதி ஆணைக்குழுவினதும் பரிந்துரை பெற வேண்டியிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆலோசனைகள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் வார நாட்களில் கடமை நேரத்தில் நிறைவேற்ற வேண்டிய உள்ளபடியான கடமை நடவடிக்கைகளுக்காக பாதீட்டு பிரிவில் 06 உத்தியோகத்தர்களுக்கும் பிரதம செயலாளர், பிரதி பிரதம செயலாளர் (நிதி) பணிப்பாளர் (பாதீடு) இற்குரிய அடிப்படை சம்பளத்தில் 1/3 விசேட படியாக கடந்த 05 வருட காலத்தில் ரூபா 05 மில்லியன் தொகையும், ஆளணி மற்றும் பயிற்சி பிரிவில் 12 உத்தியோகத்தர்களுக்கு சாதாரண கடமைகளுக்காக 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 401,900 தொகையும் மேற்பார்வை படி மற்றும் நிர்வாகப் படியாகவும் வருடாந்த இடமாற்றல் மீளாய்வு நடவடிக்கைகள் மற்றும் முறைப்பாடுகளைக் கவனத்தில் கொள்ளும் குழுவிற்காக ரூபா 436,250 படியும் கொள்கை விஞ்ஞாபங்களை முறையாகத் தயாரித்தல் மற்றும் நாளது வரையாக பேணிச் செல்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட குழுவிற்காக ரூபா 1.4 மில்லியன் படியும் சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.	1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் (5)19 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண நிதியத்தின் பொறுப்பு தொடர்பாக இறுதி அதிகாரம் கௌரவ ஆளுநருக்கு உரித்தாக இருந்தமையால் மாகாண சபையின் ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் படிகள் செலுத்தப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ஏ)	மாகாண சபையின் சகல உத்தியோகத்தர்களின் தகவல்களை உள்ளடக்கி முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்று வருடத்தில் தயாரிப்பதற்காக ஆளணி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2020 ஆம் அண்டில் Bellratage தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டு முதல் 04 நபர்களுக்கு ஆலோசனை மற்றும் இணைய உள்ளீட்டுக்காக ரூபா 280,000 வீதம் மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. 2024 ஒக்தோபர் மாதம் வரையில் ரூபா 12 மில்லியன் கணிசமான தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த தகவல் முறைமையை ஏற்படுத்துவதன் மூலம் எதிர் பார்க்கப்பட்ட எந்த பணிகளையும் நிறைவேற்றுவதற்கு மாகாண சபைக்கு முடியாதிருந்தது.	முறைமையை அமுல்படுத்துதல் தற்போது வரை ஆரம்பிக்கப்படாது இருந்தமையால் இதுவரை அதன் மூலம் பணிகள் நிறைவேற்ற முடியாது இருந்ததாக உங்களால் அவதானிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றோம்.	விரைவாக முறைமையை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	19 லீற்றர் குடிநீர் போத்தல் 100 இற்கு மேலதிகமாக மாதாந்தம் கொள்வனவு செய்யப்படும் போது ரூபா 220 தொகையில் (போக்குவரத்துடன்) வழங்க முடியுமாக இருந்த போது பிரதம செயலகத்தால் மேல் மாகாண சபை கட்டிடத்தில் அமைந்துள்ள சகல அலுவலகங்களினதும் பெறுகை நடவடிக்கைகள் இன்றி குடிநீர் போத்தல் ரூபா 384 வீதம் பொருளாதார மேம்பாட்டு பணியகம் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக ஒரு நீர் போத்தலுக்காக ரூபா 164 வீதம் 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை குடிநீர் போத்தல்கள் வழங்குவதற்கு மேலதிகமாக ரூபா 18 மில்லியன் வெஸ்வுறோ நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.	குடிநீர் போத்தல் வழங்குதல் பொருளாதார மேம்பாட்டு பணியகத்தின் மூலம் 2018.11.21 ஆந் திகதி அமைச்சரவையின் பரிந்துரைக்காக 2018.11.28 ஆம் திகதி வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டின் போது குடிநீர் போத்தல் பெற்றுக் கொள்ளுதல் பெறுகை நடைமுறையைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும்.	பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஒ)	தேவையினைக் கவனத்தில் கொள்ளாமல் பிரதம செயலகத்தால் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 9 மில்லியன் ஆன 32 சொத்துக்களின் அளவு சிற்றுண்டிச் சாலையில் 06 வருட காலமாக விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.	காண்பிக்கப்பட்டுள்ள 32 சொத்துக்களில் 15 விடயங்கள் அகற்றும் குழு நியமிக்கப்பட்டதுடன் அந்த குழுவின் மூலம் உரிய உபகரணங்களை விற்றுத் தீர்ப்பதற்கு தேவை இல்லையென பரிந்துரைக்கப்பட்டதுடன் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சிற்றுண்டிச் சாலை உபகரணங்களில் சிற்றுண்டிச் சாலை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	விளைவற்ற சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஓ)	மேல் மாகாண அரச சேவை ஊழியர் அரச சேவை பணி நடைமுறை மற்றும் விதிக் கோவையின் XVIII அத்தியாயத்தின் 192(III) பிரிவிற்கு முரணாக மேல் மாகாணத்தில் 2025 ஏப்ரல் 28 இல் உள்ளவாறு 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் 816 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், முகாமைத்து சேவையில் 616 உத்தியோகத்தர்களும் 10 இற்கும் 15 வருடங்களுக்கு இடையிலும் 209 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 287 பேர்களும் 15 இற்கும் 20 வருடங்களுக்கு இடையிலும் 54 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் முகாமைத்துவ சேவையில் 49 உத்தியோகத்தர்களும் 20 வருடங்களுக்கு மேல் 16 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், 63 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களும் வீதம் 2,110 உத்தியோகத்தர்கள் இடமாற்றப்படாமல் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றி இருந்தனர்.	பணி நடைமுறை விதி திருத்தங்களின் பிரகாரம் 2026 ஆம் ஆண்டுக்காக வருடாந்த இடமாற்றல் அமுல்படுத்துவதற்கு உத்தேசியக்கப்பட்டமையால் அதன் போது இதில் காணப்பட்ட குறைபாடுகளை மாற்றி அமைப்பதற்கு முடியுமாக உள்ளது என எதிர்பார்க்கின்றோம்.	இடம் மாற்றலை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஔ)	மாகாண நிதி விதி 416.3 மற்றும் 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மேல் மாகாண சபையினதும் மற்றும் இணைந்த நிறுவனங்களுடனும் சுகாதார சேவைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் உரிய பெறுகை நடைமுறைகள் இன்றி பெறப்பட்டு 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப் பகுதிக்காக அதன் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 573 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.	அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(க)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தின் வீடு ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த போதிலும் மாதாந்த வீட்டுப் படி ஒன்று செலுத்துவதற்கு எந்த ஒரு இயலுமையும் காணப்படவில்லை. எனினும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் உத்தியோகபூர்வ வீடுகள் நிர்மாணிக்கப்படும் வரை தற்காலிக கொடுப்பனவாக காண்பிக்கப்பட்டு இது வரை 05 வருடங்களுக்க மேற்பட்ட காலம் மேல் மாகாண சபையின் உயர் பதவியில் இருக்கின்ற 25 உத்தியோகத்தர்களுக்கு 2011 நவம்பர் மாதம் முதல்	ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளது.	தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 26 மில்லியன் உத்தியோகபூர்வ வீட்டு வாடகை படி செலுத்தப்பட்டிருந்தது.		
(கா)	2016 மார்ச் 09 ஆம் திகதிய 2016/05 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்துள்ள பதவி ஒன்றுக்கு அதிக எண்ணிக்கையில் சேவையாற்றுகின்ற விடத்து உள்ளபடியான பதவிக்கு உரித்தான எரிபொருள் படி மாத்திரம் வழங்க வேண்டியிருந்த போதிலும் மேலதிக பதவிக்காக சேவை நிலையத்திற்குப் புறம்பாக ஈடுபடுகின்ற விசேட கடமைகளுக்காக மாத்திரம் மயில் கூலி செலுத்த வேண்டியிருந்த போதிலும் பதில் கடமை பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) இற்கு 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் மற்றும் 2024 ஆம் ஆண்டின் சனவரி மாதத்திற்காக மேலதிக எரிபொருளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 125,504 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய பதவி இரண்டிலும் கடமைகளை நிறைவேற்ற எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் காணப்பட்டதுடன் குறித்துரைத்த அலுவலக நேரத்தின் பின் மற்றும் அரசாங்கத்தின் விடுமுறை நாட்களிலும் கடமை ஈடுபட்டு பதவிகள் இரண்டிற்கும் உரிய கடமைகள் குறித்துரைத்த பிரகாரம் நிறைவேற்றப்படுகின்றது. குறித்துரைத்த எரிபொருள் எல்லையை விஞ்சுகின்ற சந்தர்ப்பத்தின் போது மாத்திரம் மேலதிக எரிபொருள் அளவு உள்ளபடியான பதவிக்கு உரிய மேலதிக எரிபொருளாக வழங்குவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.11 தலைப்பு இலக்கம் 110 – பொறியியல் பணியகம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	லெனகல கனிஸ்ட வித்தியாலயத்தில் அடி 70 x 25 அளவில் மூன்று மாடிக் கட்டிட நிர்மாணம் - I ஆம் கட்டத்தின் கீழ் சாத்தியவள ஆய்வு இன்றி பொருத்தமற்ற இடம் ஒன்றில் கட்டிடம் நிர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக கட்டமைப்பத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய மேலதிக வேலைப் பகுதிக்காக ரூபா 2.2 மில்லியன் மேலதிகக் கிரயம் ஒன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட முதலாவது மாடியின் சில பகுதி 02 வருடங்களுக்கு அண்மித்த காலமாக மழை நீருக்கு உட்பட்டிருந்தது. இந்தக் கட்டிடம் நிர்மானித்தல் ஆரம்பிக்கப்பட்டு 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிர்மாணம் ஒரு மாடிக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.	இந்த செயற்திட்டத்திற்காக எஞ்சியுள்ள முதலாவது மற்றும் இரண்டாவது மாடி நிர்மாண நடவடிக்கைகள் 2026 ஆம் ஆண்டின் மூலதனத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	மிகுதி நிர்மாணங்களுக்கு முன் கட்டமைப்பை பரிசோதனைக்கு உட்படுத்தல் வேண்டும்
(ஆ)	மேம/பிளி/தர்மசேன ஆட்டிகல மகளிர் வித்தியாலயத்தில் தனி கட்டிடம் ஒன்று (110x20) மூன்று மாடிக் கட்டிடம் (90x25) வரை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாகாண அபிவிருத்தி	பதிலளிக்கப்படவில்லை.	நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

	மாணியத்தின் கீழ் ரூபா 17.5 மில்லியன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பொருத்தமான சமூக அடிப்படையிலான அமைப்புடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு 04 மாதங்களினால் தாமதிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 3.9 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப பணிகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு இந்த கட்டிடத்தின் சகல நிர்மாணங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை.		
(இ)	அவிசாவளை மாவட்ட வைத்தியசாலையில் நீண்ட காலமாக பயன்படுத்தப்படுகின்ற மேல் மாகாண பொறியியல் பணியகத்திற்குரிய 04 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் 1997 ஆம் ஆண்டு முதல் சப்பிரகமுவ பேருந்து கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற காணி மற்றும் கட்டிடம் மாகாணப் பொறியியல் பணியகத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது வருடாந்த மதிப்பீட்டை மேற்கொண்டு வாடகை வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	உத்தியோகபூர்வ இல்லங்கள் சுகாதார அமைச்சுக்கு கையளிப்பதற்கு உரிய சீதாவாக்க பிரதேச செயலாளரினால் அளவிடல் கட்டளை சரியாக மேற்கொண்டு நில அளவையாளர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் தேவையான மிகுதி நடவடிக்கைகள் எதிர் வரும் மாதத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இலங்கை போக்குவரத்து சபையின் பிரதேச முகாமையாளர் இந்த கட்டடத்தின் உரித்தை சட்ட ரீதியாக தமது கம்பனிக்கு கையளிக்குமாறு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிறுவனத்திற்கு பெற்று கொள்ளுவதற்கோ அல்லது நிறுவனத்திற்கு வழங்குவதற்கோ அல்லது வாடகை வருமானத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	கேத்துமதி மகளிர் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடம் மற்றும் அவசர நோயாளர் பிரிவிற்காக மத்திய வளிப்பதனாக்கி முறைமை ஒன்றை வழங்கும் செயற்திட்டத்திற்காக 2018 இன் மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 38 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்துடன் 2020 யூலை 10 ஆந் திகதி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படுவதாக வழங்குனர் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வேலை பூர்த்தி செய்தல் சான்றுதல் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. சரியான பரிசோதனை மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளாமையின் காரணமாக முறைமை முழுவதும் செயலிழந்த நிலைக்கு உட்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 48 மில்லியன் வழங்குனர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அவசர	குறைபாடுகள் காணப்படுகின்றமையால் வேலை பூர்த்தி செய்தல் சான்றிதழ் விநியோகிக்கப்படவில்லை. நிறுத்தி வைத்தல் ரூபா 1 மில்லியன் அரசாங்க வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதாக Testing & Commission அறிக்கையின் பிரகாரம் முறைமை 50 சதவீதம் அல்லாமல் 100 சதவீதம் செயற்படல் நிலையில் காணப்படுவதாக காண்பிக்கப்பட்டுள்ளது. Softlogic நிறுவனத்தை வரவழைத்து	முறைமையில் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பிரிவிற்கு உரிய Unit 02 ஸ்தாபிக்கப்பட்ட சமயத்தில் இருந்து செயற்படுநிலையில் காணப்படாது இருந்தமையும் ஏனைய Unit 02 இலும் அவ்வப்போது குறைபாடுகளுக்கு உட்பட்டிருந்தது. அந்த வழுக்கள் தொடர்பாக வழங்குனர் நிறுவனத்திற்கு தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்ட பின்னர் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை தற்காலிக தீர்வாக இருந்ததுடன் 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதி பட்டய இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரையின் பிரகாரம் Condenser Unit 04 உற்பத்தி வழுவில் காணப்படுகின்றமையால் அவற்றை மாற்றி புதிதாக ஈடுபடுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரால் அதற்காக நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக தற்போது ஒரு வருட அளவிலான காலத்தில் இருந்து ஒட்டுமொத்த முறைமையும் செயலிழந்து இருந்தது.	அவ்வப்போது கூட்டங்கள் நடாத்தி பழுது பார்ப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வப்போது இடைக்கால அறிக்கை விநியோகிக்கப்பட்டுள்ளது.	
(உ)	மில்லனிய பிரதேச செயலகப் பிரிவில் வித்தியாலோக வித்தியாலயத்தில் சித்திரக் கூடத்தின் வேலைக்காக ரூபா 2.5 மில்லியன் நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் மாதம் வேலை பூர்த்தி செய்யும் அடிப்படையில் ரூபா 2.5 மில்லியன் தொகை ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டிருந்தது. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்களில் SBD-3 இன் Section 3 இன் 6.2 இன் பிரகாரம் செயற்திட்டத்தின் வேலைகள் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்படும் என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக செயற்திட்டத்திற்குரிய வேலைக் குறிப்புக்களைப் பெறாமல் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டு ரூபா 2.5 மில்லியனுக்கு உரிய செயற்திட்டத்தில் ரூபா 707,808 அதாவது 28 சதவீதம் வேலை மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி நிறுத்தப்பட்டிருந்தது.	மில்லனிய பிரதேச செயலகப் பிரிவில் வித்தியாலோக வித்தியாலயத்தில் சித்தரக் கூடத்தின் வேலைகள் 2024.12.31 ஆந் திகதி நிர்மாணித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அளவு வரை செலுத்தப்பட்டு 2025 ஆம் ஆண்டில் தொடர் வேலையாக கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	பாணந்துறை பிரதேச பொறியியல் அலுவலகத்தால் பாணந்துறை பிரஜாபதி சிறுவர் இல்லத்தில் நிர்மாண நடவடிக்கைகள் 2024 நவம்பர் 21 ஆந் திகதி ரூபா 2.3 மில்லியனில் வேலை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உள்ளபடியாக ரூபா 1.2 மில்லியன் மாத்திரம் வேலைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2024 திசெம்பர் 20 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்ய வேண்டிக் காணப்பட்ட போதும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது.	இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான காலம் போதியளவில் காணப்படவில்லை. 2024 திசெம்பர் 31 இன் பின்னர் 2025 ஆம் ஆண்டில் தொடர் நடைமுறை வேலையாக இல்லாமையினால் முழுமையாக நிறைவேற்றுவதற்கு கூடிய விடயங்கள் மாத்திரம் நிறைவேற்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது குறித்துரைத்த காலத்தில் செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியுமான வகையில் ஒப்பந்தகாரரிடம் இருந்து வேலைத் திட்டம் ஒன்றைப் பெற்று உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.12 தலைப்பு இலக்கம் 111 – வருமானத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மேல் மாகாண சபையில் 1990 இன் 06 ஆம் இலக்க நிதி விஞ்ஞாபனத்தின் பிரகாரம் சட்டத்தரணி எழுதி உறுதிப்படுத்துகின்ற உரித்து உறுதிகளில் இரண்டாவது பிரதிக்காக நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் 19 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் இருந்து 2024 ஆம் ஆண்டில் பெறுமதி ரூபா 3,636 மில்லியன் ஆன 1,049 உரித்து உறுதிகளின் தகவல்கள் 2024 ஆம் ஆண்டின் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த போதிலும் அதில் ரூபா 3,217 பெறுமதியுடைய 637 உரித்துறுதிகள் தொடர்பான கோவைகள் திறக்கப்பட்டு மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கப் பெற்ற உரித்து உறுதிகள் யாலும் 2024 மே 30 இல் உள்ளவாறு நடவடிக்கைகள் பூர்த்தி செய்து கொள்வதற்கு சகல அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.	தகவல்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	மேல் மாகாண இறைவரித் திணைக்களத்தால் காணி உரித்து உறுதி கையளிப்பதற்கா முத்திரைக் கட்டணம் அறவிடும் போது ஸ்தாபிக்கப்படுகின்ற நிர்வாக முறைமைகளின் நலிவுகளின் காரணமாக 2017 நவம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 738 என்ற உரித்து உறுதி கையளிப்பதற்காக செலுத்த வேண்டிய ரூபா 4 மில்லியன் முத்திரைக் கட்டணம் உரிய சட்டத்தரணியால் மேல் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தாமல் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. இந்த தொகை மற்றும் அது தொடர்பான தண்டப்பணத்துடன் ரூபா 8 மில்லியன் அறவிடுவதற்காக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் இலக்கம் 47142/5 என்ற வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த காலப் பகுதிகளுக்க இடையே உரிய சட்டத்தரணி மரணமடைந்ததன் காரணமாக மேல் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 4 மில்லியன் முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.	கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.	வருமானம் அறவிடப்படல் வேண்டும்.

1.5.13 தலைப்பு இலக்கம் 112 – உள்ளூராட்சி திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவிற்கு முரணாக புலத்சிங்கள பொது விளையாட்டு அரங்கிற்கு அடுத்தால்	மேல் மாகாண உள்ளூராட்சி செயலாளரின் இலக்கம் CMWP/ADM23/07/22 மற்றும்	விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்தி உரிய

	உள்ள உபகூறிடப்பட்ட காணி தொடர்பாக ஆதன கம்பனி ஒன்றினால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பீடாக ரூபா 7.8 மில்லியன் பிரதேச சபையினால் ஆதனக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த காணி உபகூறிடல் தொடர்பாக முறையான நடைமுறை பின்பற்றாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் மூலம் விசாரணை அறிக்கை சமர்ப்பித்தல் தாமதமடைந்ததன் அடிப்படையில் இந்த வழக்கு முடிவடைந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இழப்பீடாக செலுத்தப்பட்ட ரூபா 7.8 மில்லியன் தொகை உரிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு புளத்சிங்கள பிரதேச சபைக்கு முடியாதிருந்தது.	2025.06.03 ஆந் திகதிய உரிய உத்தியோகத்தரின் குற்றப் பத்திரிகை திருத்தப்பட்டு 2025.06.05 ஆம் திகதி களுத்துறை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.	உத்தியோகத்தரை இனங்கண்டு சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	உள்ளூராட்சி அமைச்சு செயலாளருக்கு உத்தியோகபூர்வ இல்லம் ஒன்று வழங்கப்பட்டிருக்கும் போது அவருக்கு அரச நிர்வாக அமைச்சுக்கு உரிய கொழும்பு 05, கெப்படிகொல மாவத்தை, 09B என்ற தொகுதி வீடு பழுது பார்க்கப்பட்டு பயன்படுத்துவதற்கு மேல் மாகாண சபையின் நிதியத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கொழும்பு மாநகர சபையினால் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக ஒப்பந்தம் தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. கேள்வி சமர்ப்பிக்கப்பட்ட திகதி 2024 செப்தெம்பர் 12 ஆகவும் Letter of Acceptance இல் திகதி 2024 ஒக்தோபர் 10 ஆகவும் Form of BID இன் திகதி மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியான 2024 திசெம்பர் 10 ஆகவும் குறிப்பிடப்பட்டிருந்த போதும் சகல பணிகளும் நிறைவேற்றிய பின் அதாவது 2024 திசெம்பர் 14 ஆந் திகதி செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மாகாண சபைக்கு சொந்தமற்ற அரச நிர்வாக அமைச்சுக்கு உரிய இல்லம் ஒன்றை திருத்துவதற்காக ரூபா 5 மில்லியன் தொகை செலவிடுவதற்கு உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு சட்ட ரீதியான இயலுமை காணப்படாது இருந்த போதும் செயற்திட்டம் ஒன்றை அமுல்படுத்தும் முறை முறையற்றதாக கொழும்பு மாநகர சபைக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது.	உத்தியோகபூர்வ இல்லத்தின் திருத்த நடவடிக்கைகளுக்காக ரூபா 4.8 மில்லியன் தொகை 109 செலவினத் தலைப்பு ஏற்பாட்டின் மூலம் வழங்குவதற்கு கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் தற்போது உள்ளூராட்சி அமைச்சு (மேம) செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லமாகப் பயன்படுத்தப் படுகின்றது.	மாகாண சபை நிதியம் மாகாண சபை பணிகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும்.

1.5.14 தலைப்பு 113 – சுகாதார சேவைகள் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தொம்பை மாவட்ட வைத்தியசாலைக்காக 2019 ஆம் ஆண்டில் இருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கிடைக்கப் பெற்ற ரூபா 1 மில்லியன் பெறுமதியான 20 வகையான மருந்துகள் காலாவதியாகி இருந்ததுடன் அந்த மருந்துகள் காலாவதியாவதற்கு முன் தேவையான பிரகாரம் ஏனைய வைத்தியசாலைகளுக்கு கையளிப்பதற்கோ அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த மருந்துகள் காலாவதியாகியமை தொடர்பான விடயங்கள் Non Movement Item ஆக தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	காலாவதியாவதற்கு முன் தேவையான ஏனைய வைத்தியசாலைகளுக்கு கையளிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் காணப்படுகின்ற 40 சுகாதார நிறுவனங்கள் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 08 மில்லியன் பெறுமதியான காலாவதியான மற்றும் ரூபா 53 மில்லியன் பெறுமதியான தரம் கெட்ட மருந்துகள் காணப்பட்டதுடன் இதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த நடவடிக்கைகள் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள வரிசை சுகாதார அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் தரம் கெட்ட மருந்துகளை அகற்றுமாறு மத்திய அரசின் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	முப்பது வருடங்களுக் மேற்பட்ட காலம் முதல் சிங்ஹாரமுள்ள மத்திய மருந்தகத்திற்கு உரிய RMO உத்தியோகபூர்வ இல்லத்தின் அனுமதியற்ற வகையில் குடியிருந்து வருவதுடன் அந்த குடியிருப்பாளரை அகற்றி உரிய உத்தியோகபூர்வ இல்லத்தை திணைக்களத்தின் பணிகளுக்காக ஈடுபடுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	உத்தியோகபூர்வ இல்லத்தில் அனுமதியற்ற வகையில் குடியிருந்து வருகின்றவர் அந்த இடத்தில் இருந்து அகற்றுவதற்கு உரிய 2024.05.29 ஆந் திகதி மகர நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 71820/22 இன் கீழ் வழங்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் தற்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	நீதிமன்றக் கட்டளைகளை அமுல்படுத்துதல் தொடர்பாக பரீட்சித்தல் வேண்டும்.
(ஈ)	கொரண பெல்லப்பிட்டிய பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவில் களஞ்சிய உள்ளக பகுதியில் 2022 ஒக்தோபர் மாதம் ஸ்தாபிக்கப்பட்ட VIESMSNN வகையின் Walk – in cold room ஸ்தாபிக்கப்பட்ட திகதியில் இருந்து சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. இந்த Walk – in cold room ஒன்றில் உயிர் பாதுகாப்பு தடுப்பூசிகள் களஞ்சியப்படுத்தப் பட்டமையினால் உரிய காலத்தில் சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையின்	இந்த Walk – in cold room முறைமை சேவைக்காக நடவடிக்கை எடுப்பதற்காக blue sky மற்றும் iceman Tacnologies (pvt) ltd நிறுவனத்தின் மூலம் சேவை மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த மதிப்பீடு அங்கீகரித்துக் கொள்வதற்காக இயந்திரப்	முறைமையின் சேவை நடவடிக்கைகள் தாமதம் இன்றி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	காரணமாக திடீர் செயலிழப்பு உட்படக் கூடியதாக இருந்ததுடன் இயந்திரத்தின் இருப்பிற்காக சேவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	பொறியியலாளருக்கு அனுப்பப்பட்டு விரைவாக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	
(உ)	2022 மார்ச் 12 அந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்த அவிசாவளை பொது வைத்தியசாலைக்குரிய LW-1466 நோயாளர் காவும் வண்டியின் பழுது பார்த்தல் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த விபத்து தொடர்பான நட்ட இழப்பு பரிசோதனைகளை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நோயாளர் காவும் வண்டியின் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் மூன்று வருட காலமாக கராஜ் இல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	மொத்த தொகையும் கிடைத்தல் நிச்சயமற்ற நிலைமையினால் கராஜ் இதுவரை இந்த பழுது பார்த்தலை மேற்கொள்ளவில்லை. ரூபா 5 மில்லியன் மதிப்பீட்டின் பிரகாரம் இந்த நோயாளர் காவும் வண்டியை பழுது பார்ப்பதற்காக அந்த நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	விரைவாக பழுது பார்த்தலை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும்.
(ஊ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேல் மாகாண சுகாதார திணைக்களத்தின் கீழ் சேவையில் ஈடுபட்டிருந்த 10,849 ஆன சுகாதார பதவியணியினரின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 19,985 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அந்த சம்பளம் மற்றும் படிகளில் மருத்துவ உத்தியோகத்தர்கள் 2,054 பேர்களின் சம்பளம், மேலதிக நேரம் மற்றும் ஏனைய படிகளாக முறையே ரூபா 5,328 மில்லியன், ரூபா 2,389 மில்லியன் மற்றும் ரூபா 830 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் தாதியர் பதவியணியினரின் 2,632 பேர்களுக்காக சம்பளம், மேலதிக நேரம் மற்றும் ஏனைய படிகளாக முறையே ரூபா 2,709 மில்லியன், ரூபா 904 மில்லியன் மற்றும் ரூபா 656 மில்லியனும் அந்த முறையில் ஏனைய பதவியணியினரில் 6,197 பேர்களுக்காக சம்பளம், மேலதிக நேரம் மற்றும் ஏனைய படிகளாக முறையே ரூபா 5,356 மில்லியன், ரூபா 1,029 மில்லியன் மற்றும் ரூபா 779 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் சுகாதார சேவையில் எந்த ஒரு உத்தியோகத்தரும் கைவிரல் அடையாள இயந்திரம் வருகை செல்கை குறிப்பிடல் மேற்கொள்ளாமையினால் எந்த ஒரு கட்டுப்பாடும் இன்றி மேலதிக நேரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சேவை மாற்றம் முறையில் ஏற்படுத்தப்பட்டு மேலதிக நேரக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சுகாதார அமைச்சு செயலாளர் பொது சுற்றறிக்கை இலக்கம் 01-12/2016 என்ற 2016.06.30 ஆந் திகதி சுற்றறிக்கையின் பிரகாரம் சகல மருத்துவ உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபட்டிருக்கின்றமை உறுதிப்படுத்தி கடமை தினவரவுப் புத்தகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் மருத்துவர்களுக்கான வருகைப் பதிவேடு பேணிச் செல்லப்படுவதில்லை. அதன் பிரகாரம் மருத்துவர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய படிகள் செலுத்தும் போது உள்ளபடியான சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமைக்கு கடமை தினக் குறிப்பேடு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் சகல கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படுவதுடன் தாதியர் மற்றும் ஏனைய பதவியணியினருக்கான வருகை பதிவேட்டின் மூலம் உள்ளபடியான சேவையில்	சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ஈடுபட்டிருந்தமை உறுதிப்படுத்தி சம்பளம் மற்றும் ஏனைய படிகள் செலுத்தப்பட்டுள்ளது.	
(எ)	2022 ஆம் ஆண்டின் போது மருத்துவ வழங்கல் பிரிவினால் பெல்லப்பிட்டிய பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட ரூபா 5.2 மில்லியன் பெறுமதியான 6,800 லீற்றர் ஜம்போ ஒக்சிசன் பெற்றிரி சிலிண்டர் 60 விளைவற்றுக் காணப்பட்டது.	இந்த சிலிண்டரை எதிர்காலத்தில் ஏதாவது அவசர நோய் நிலைமை அல்லது தொற்று நோய்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் பகிர்ந்தளிக்கக் கூடிய வகையில் பாதுகாப்பு இருப்பாக பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது.	தேவையின் பிரகாரம் இருப்பு மட்டத்தை பேணிச் செல்லல் வேண்டும்.
(ஏ)	கம்பஹா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் காணப்படுகின்ற ரூபா 102 மில்லியன் பெறுமதி உடைய 23 வாகனங்கள் மற்றும் களுத்துறைப் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவகத்திற்கு சொந்தமான பெறுமதி இனங்காணப்படாத 12 வாகனங்கள் ஓட்ட நிலைமையில் காணப்படாது இருந்ததுடன் அந்த வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது பழுது பார்த்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் உடைந்த நிலையில் காணப்பட்டது.	சில வாகனங்களுக்காக இயந்திப் பொறியியலாளரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் விற்றுத் தீர்க்கக் கூடிய வாகனங்கள் தொடர்பாக குழுத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெயரில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் 87 இன் இருப்பு உறுதிப்படுத்த முடியாது இருந்தது.	பதிலின் பின்னர் சமர்ப்பிக்கப்படும்.	வாகனங்களின் இருப்பு உறுதிப்படுத்துல் வேண்டும்.

1.5.15 தலைப்பு இலக்கம் 114 – ஆயுள்வேத திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 மார்ச் 29 ஆந் திகதிய SEC/2023/E/01 என்ற சேவை வருமான முற்பணம் தனிநபர் வருமான வரி குறைத்தல் தொடர்பாக சேவை வழங்குனருக்கான ஆலோசனைக் கோவையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீடு ஆண்டிற்காக ரூபா 1.2 மில்லியனை விஞ்சுகின்ற அல்லது மாதத்திற்கு ரூபா 100,000 இனை விஞ்சுகின்ற ஊதியங்கள் பெறுகின்ற எந்த ஒரு நபரும் அல்லது பிரஜை சேவையில் உழைக்கும் செலுத்தும் வருமானத்தின்	மருத்துவர்களிடம் இருந்தும் சம்பளத்திற்காகவும் இது அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏதாவது தவறின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளாது இருந்ததுடன் 24/25 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த வரித் தகவல்கள் உள்நாட்டு இறைவரித்	செலுத்துதல் அங்கீகரிக்கின்ற, உறுதிப்படுத்துகின்ற மற்றும் பரிந்துரை செய்கின்ற உத்தியோகத்தர் இது தொடர்பாக பொறுப்புடையவர்கள் ஆகும்.

	அடிப்படையில் முற்பணம் நபர் வருமான வரிக்கு கடப்பாடு உடையவர் ஆகும். எனினும் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது ஆய்வுத் திணைக்களத்தின் வருடாந்தம் மொத்த சம்பளம் ரூபா 1.2 மில்லியனை விஞ்சுகின்ற 31 மருத்துவர்களிடம் இருந்து முற்பண நபர் வருமான வரி கழித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்திற்கு அனுப்பி முடிவடைந்துள்ளமையால் மீண்டும் வரி அறவிடுவதற்கும் முடியாதுள்ளது. 25/26 ஆம் ஆண்டின் போது வரி கணிப்பிட்டு வருடாந்த வருமானம் ரூபா 1,800,000 வரை உயர்வடைந்துள்ளது.	
(ஆ)	மீகொட ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆயுர்வேத சிகிச்சை நிலையத்தை நிர்மாணித்தல், தங்கியிருக்கும் நோயாளர்களுக்காக தங்குமிட பிரிவு ஒன்றை நிர்மாணித்தல், பதவியணியினருக்காக ஓய்வு அறை மற்றும் புதிய சிகிச்சை நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டம் 07 இனை அமுல்படுத்துவதற்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 33 மில்லியன் திணைக்களத்தால் அதிகார சபைக்கு செலுத்தப்பட்ட போதும் இந்த கொடுப்பனவுகளின் போது சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்கான அளவிடல் பத்திரங்களின் அளவிடை மற்றும் விலை வீதங்கள் சரியாக இருந்ததாக பொறியியலாளர் உறுதிப்படுத்தாது இருந்ததுடன் பொறியியல் பணியகத்தின் மேற்பார்வை இன்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எந்த ஒரு செயற்திட்டமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிர்மாணித்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருக்க வில்லை.	செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்த செய்யப்படாது இருந்ததுடன் முதலாவது பகுதியின் பட்டியல் செலுத்தும் நடவடிக்கைகளுக்காக அளவிடல் நடவடிக்கைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.	குறைபாடுகளைத் தயாரித்து செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.
(இ)	மொல்லிகொட ஆயுர்வேத வைத்தியசாலையில் மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் பஞ்சகர்ம நிலையம் ஒன்றை ஸ்தாபிக்கும் அடிப்படை நோக்கமாக வெளிநாட்டு நபர்களுக்காக மிகவும் தரம் வாய்ந்த சிகிச்சைகளை வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை நோக்காகக் கொண்டு மற்றும் நிதி அறவிட்டு சேவை வழங்குவதன் மூலம் மேல் மாகாண மக்களின் நோய் நிவாரணத்திற்கு அதிக பங்களிப்பு வழங்குவதாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்காக சுற்றுலா வியாபாரம் வீழ்ச்சி அடைந்து காணப்படுகின்ற முள்ளிகொட பிரதேசத்தில் சுற்றுலாப் பிரயாணிகள் பஞ்சகர்ம நிலையத்திற்கு வருவதை மேம்படுத்துவதற்காக பொருத்தமான எந்த	இதற்காக நோயளர்களின் கோரிக்கை தற்போது காணப்படாமை மற்றும் இலங்கை கலாசாரத்துடன் ஒரு தடவையில் ஐந்து பேர்கள் சிகிச்சை பெறுவதற்கு காணப்படுகின்றமையால் இந்த இயந்திரம் தற்போது குறைவான பயன்பாடு உள்ள சொத்தாக காண்பிக்க முடியும். இந்த பஞ்சகர்ம நிலையம் எதிர்காலத்தில் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்காக திறப்பதற்கான	சாத்தியவள ஆய்வின் பின்னர் செயற்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டி இருந்ததுடன் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதம் இன்றி எடுக்கப்படல் வேண்டும்.

	ஒரு மேம்படுத்தல் உபாய வழிகளும் அல்லது உள்நாட்டு மக்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட சிகிச்சைகளை அமுல்படுத்தாமையின் காரணமாக அதில் அநேகமான பிரிவுகள் விளைவற்றுக் காணப்பட்டது. நிலையத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டு பொருத்தப்பட்ட ரூபா 2 மில்லியன் ஆன உபகரணங்கள் பொருத்தப்பட்டு 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிலையம் விளைவற்றுக் காணப்பட்டது.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	
(ஈ)	மீகொட புதிய சிகிச்சை நிலையம் மற்றும் தங்குமிட பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 09 மில்லியன் பெறுமதியான தளபாட உபகரணங்கள் மற்றும் ரூபா 1 மில்லியன் பெறுமதியான தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களும் ஆயுர்வேத வைத்தியசாலையில் இருந்து இந்த சிகிச்சை நிலையத்திற்காக 2024 செப்தெம்பர் 13 ஆந் திகதி வழங்கப்பட்ட தளபாட உபகரணங்களும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. வைத்தியசாலைக்கு உரிய இலக்கம் 04 உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் கெஸ்வாவ ஆயுர்வேத வைத்தியசாலைக்கு உரிய உத்தியோகபூர்வ இல்லமும் விளைவற்றுக் காணப்பட்டது.	மீகொட புதிய சிகிச்சை நிலையம் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக இது வரை திறப்படாது இருந்தமையால் உரிய சகல பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பாதுகாப்பாக காணப்படுவதுடன் உத்தியோகபூர்வ இல்லத்திற்குத் தேவையாகக் காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் சிலர் அதற்காக அது தொடர்பாகக் கண்டறிந்து பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விளைவற்ற சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.16 தலைப்பு இலக்கம் 115 – சமூக சேவைகள் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சமூக சேவைகள் திணைக்களத்திற்கு உரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் 47 இல் 13 இல்லங்கள் பயன் பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்படுவதுடன் இந்த இல்லங்களைப் பழுது பார்த்து பயன் படுத்துவதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த 13 இல்லங்களுக்கு இடையே சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கி காணப்படுகின்ற நிதியேற்பாட்டின் அடிப்படையில் தேவையான பழுது பார்த்தல்களை மேற்கொண்டு விண்ணப்பத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விளைவற்ற சொத்துக்களை பயன் பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சமூக சேவைகள் திணைக்களத்தில் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தெஹிவளை, பெல்லன்தர வீதி இலக்கம் 46 முகவரியில் அமைந்துள்ள மிட் செவன அரசாங்கத்தின் விசேட சிறுவர் புனருத்தாபன நிலையம்	இந்த திணைக்களத்திற்கு காணி கையளிப்பதற்கு காணி ஆணையாளருக்கு பரிந்துரை அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இந்த காணி திணைக்களத்திற்கு காணி	காணி உரித்து உறுதி சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அமைந்துள்ள 0.3818 ஹெக்ரேயர் இனை உடைய காணி உரித்துறுதிச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.	ஆணையாளர் மூலம் காணிக்காக கையளிக்கப்படும்.

1.5.17 தலைப்பு இலக்கம் 116 – நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சான்றுபடுத்தப்பட்ட பாடசாலை நிலையியற் கட்டளை VII ஆம் பகுதியின் (I) இன் பிரகாரம் சான்றுபடுத்தப்பட்ட பாடசாலையில் மேற்கொள்ளப் படுகின்ற தொழில்சார் பயிற்சி சந்தர்ப்பங்களின் போது பிள்ளைகளின் திறமை மற்றும் வேலை தரங்களை கண்காணிப்பதற்கும் பாடசாலையில் விலகிய பின்னர் அவர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கும் முடியுமான வகையில் இயலுமான வகையில் நேர்மையாகவும் நம்பிக்கையுடனும் வேலை செய்யும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்கும் எந்த ஒரு தொழில் ரீதியான கவனத்தில் கொள்ளக் கூடிய பயிற்சி ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் முடியாத வகையில் எந்த ஒரு சிறுவருக்கும் மிகவும் குறைந்த வயதுடைய பெயர் அல்லது அவர் இருக்கின்ற காலம் மிகவும் குறுகிய அல்லது பயிற்சிக் காலத்தில் அவருக்கு வேலை வாய்ப்பு ஒன்றை பெற முடியுமான வகையில் அவருக்கு ஆகக் கூடிய பயிற்சி ஒன்றை வழங்க வேண்டியிருந்த போதிலும் மாக்கொல சான்றுபடுத்தப்பட்ட பாடசாலையில் இருக்கின்ற சிறுவர்கள் எந்த ஒரு தொழிற் பயிற்சியிலும் ஈடுபடாது இருந்ததுடன் பாடசாலையில் வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்பட்ட மின்சாரம் மற்றும் கைத்தொழில்கள் போன்ற தொழில்களுக்காக பயிற்சி முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த பயிற்சிகளுக்கு தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் கட்டிடமும் விளைவற்று துரப்பிடித்த நிலையில் காணப்பட்டது.	பாடநெறி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் வழங்கப்படுகின்றது.	விரைவாக பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மேல் மாகாண நிறுவனங்கள் மற்றும் தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் 2,250 சிறுவர்களுக்காக டீ-சேட் மற்றும் காற்சட்டைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 5.7 மில்லியன் வட் இன்றிய தொகையில் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் போது பெறுகைக் குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்ட வழங்குனரிடம் இருந்து டீ-சேட் கொள்வனவு செய்வதற்கு உரித்தல்லாத உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்குரிய கேள்வி பிழையாக சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக 2006 ஆம் ஆண்டின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.5.1 (ஈ) பந்தியின்	பெறுகை நடவடிக்கைகளுக்காக காணப்பட்ட கால எல்லையின் அடிப்படையில் விரைவாக டீ-சேட் காற்சட்டைகள் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் போது இந்த தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் எதிர் காலத்தில் அவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு கவனத்தில்	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பிரகாரம் நியாயமான போட்டி ஒன்றினால் சிறந்த விலை மற்றும் தரத் தன்மை உயர்வான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு திணைக்களத்திற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட டீ-சேட்களின் தரம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	கொள்ளப்படுவதுடன் நியமத்தை பரீட்சிப்பதற்காக பூர்த்தி ஆடைகள் தொடர்பாக சிறந்த அனுபவம் உள்ள நிபுனர் குழு நியமிக்கப்பட்டதுடன் அதன் தொடர்பாக பரீட்சித்து அந்த அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	
(இ)	மாகொல சான்றுபடுத்தப்பட்ட பாடசாலையில் காணப்படுகின்ற நூலகம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்படுவதுடன் சிறுவர்களில் விளையாட்டு இயலுமையை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வசதிகள் பாடசாலையில் காணப்பட்ட போது அவை உரிய பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுக்காமையின் காரணமாக ரூபா 11 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்ரங்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் தேவையின்றி மாகொல சான்றுபடுத்தப் பட்ட பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 450,000 ஆன முச்சக்கர வண்டி 05 வருட காலமாக குறைவாகப் பயன் படுத்தப்பட்டிருந்தது.	பதவியணியினர் வரையின் அடிப்படையில் நூலக நடவடிக்கைகள் உரிய பிரகாரம் பேணிச் செல்லல் சீரற்றதாக இருந்தமை இந்த விளையாட்டு மைதானம் போட்களுக்காக பயன்படுத்தப்படுகின்றமை மற்றும் தற்போது இந்த முச்சக்கர வண்டியை பழுது பார்ப்பதற்கு தேவையான மிகுதி நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றது.	விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.18 தலைப்பு இலக்கம் 120 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கொட்டதெனியாவ கால்நடை வளர்ப்பு பயிற்சி நிலையத்தில் இனப்பெருக்க பண்ணையில் கால்நடைகளின் போசணை மட்டத்தை உயர்வடையச் செய்தல் மற்றும் பண்ணையில் தெங்குப் பயிர்ச் செய்கையைப் பராமரிக்கும் நோக்காகக் கொண்டு 2024 ஆம் ஆண்டில் ரூபா 4 மில்லியன் திருத்தப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் 106-3-2-0-2509-13 செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூலதன செயற்திட்டம் ஒன்றில் சகல செயற்பாடுகளும் மீண்டெழும் செலவினமாக்கப்பட்டிருந்தது. மொத்த செலவினத்தில் 77 சதவீதம் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் அல்லாது இருந்தமையால் அமைய ஊழியர்களுக்காக சம்பளம் செலுத்துதவற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. பண்ணையின் உற்பத்தி விற்பனை மேம்படுத்துவதன் மூலம் வருமானத்தை கட்டியெழுப்புவதற்காக விற்பனைச்	கொட்டதெனியாவ கால்நடை வளர்ப்பு பயிற்சி நிலையத்தை செயற்படுத்துவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் பதவியணியினர் அங்கீகரிப்பிற்கான செயற்பாடுகளும் அது நிறைவேற்றப்படாமையினால் அமைய ஊழியர்களை சேர்த்து செயற்திட்டத்தின் மூலம் சம்பளம் செலுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை சேர்த்து சம்பளம் ஏற்பாடுகள் அதற்காக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள் அந்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும்.

சாலைகளை நடாத்திச் செல்லும் நோக்கில் 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 4.5 மில்லியன் நிதியேற்பாடுகளில் ரூபா 3 மில்லியன் மீண்டெழும் செலவினமாக செலவிடப்பட்டிருந்தது.

1.5.19 தலைப்பு இலக்கம் 121 – மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் விநியோகித்தல் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட Erl-02 செயற்திட்டம் இலங்கை தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப முகவராண்மை நிறுவனத்துடன் 2021 ஆம் ஆண்டில் ரூபா 106 மில்லியனுக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2025 மார்ச் வரையில் உடன்படிக்கைத் தொகையில் ரூபா 26 மில்லியன் மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் தற்போது ஈடுகொடுக்கின்ற வகையில் பொது மக்களுக்கு வசதிகளை வழங்கி இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு மேல் மாகாண சபைக்கு முடியாதிருந்தது. மேலும் ஏனைய மாகாணங்களுடன் ஒன்றிணைந்து செயற்திட்டத்தை அமுல்படுத்தாமையினால் முறைமையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களுக்காக ரூபா 4.4 மில்லியன் தொகை மேலதிகமாக செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது.	ஏனைய மாகாணங்களில் 2023 ஒக்தோபர் மாதத்தில் 03 நாட்கள் முதல் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தப்பட்ட போதும் மேல் மாகாணம் இந்த முறைமையை தொடர்புபடுத்தாமையால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தொழில் நுட்ப விடயங்கள் 21 மற்றும் செயற்திட்டப் பிரச்சனைகள் சில எஞ்சியிருந்தமையால் ஆகும்.	செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் Erl-o2 செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட 39 பிரின்டர்கள் மற்றும் 07 கணனிகளின் அளவு நிறுவனத்தில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதுடன் தகவல் தொழில் நுட்ப வள அபிவிருத்தி அதிகார சபைக்கு (ITRDA) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பழுது ாபர்ப்பதற்கு வழங்கப்பட்டிருந்த CPU இயந்திரம் 07 மற்றும் 18 அச்சிடல் இயந்திரங்கள் பழுது பார்க்கப்படாமல் காணப்பட்டது.	தற்போது வாகன அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படுகின்ற கரும பீடத்திற்காக ஈடுபடுத்துவதற்கும், பிரதேச செயலகங்களில் இயந்திரங்கள் செயலிழக்கும் போது அந்த இயந்திரத்தை பழுது பார்க்கும் வரை தற்காலிகமாக விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சொத்துக்களைப் பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டியிருந்ததுடன் விரைவாக பழுது பார்த்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.20 தலைப்பு இலக்கம் 122 – கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கம்பகா மாவட்டத்தில் மாவட்ட சனச சங்கத்தை உள்ளடக்கிய 24 சனச சங்கங்கள் 1998 முதல் 2016 வரையான காலத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி கம்பகா அபிவிருத்தி தனியார் கம்பனியில் (GDC) ரூபா 841 மில்லியன் தொகையான சாதாரண பங்குகள் மற்றும் முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு செய்திருந்ததுடன் கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் 38(1) பிரிவிற்கு முரணாக 2011 – 2019 காலத்தில் வ/ப கம்பஹா மாவட்ட சனச சங்கம் ரூபா 708 மில்லினும், வ/ப கம்பகா சனச நகர வங்கி ரூபா 1,248 மில்லியனும் கடன் வழங்கியிருந்தது. கடன் பெற்றுக் கொள்ளும் போது சட்ட ரீதியான பிணை காப்புறுதி பெற்றுக் கொள்ளாமல் கடன் விநியோகிக்கப்பட்டிருந்தது. கடன் தொகை, முதலீட்டுத் தொகை மற்றும் வட்டி வருமானம் பெற்றுக் கொள்ளல் கம்பனி புறக்கனித்தமை தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	முதலீட்டுப் பணம் மற்றும் வட்டித் தொகையை பெற்றுக் கொள்ளல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாக இருந்ததுடன் அவர்களினால் உரிய பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியவை மற்றும் ஜீடீசீ நிறுவனத்தில் இருந்து பணத்தை அறவிடுவதற்கு சட்ட ரீதியான ஏற்பாடுகள் காணப்படாது இருந்ததுடன் அதற்குப் பொறுப்பு வாய்ந்த தொழிற்படு சபையில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் 33(2)(ஆ) பிரிவின் பிரகாரம் ஆதனங்களைக் கொள்வனவு செய்யும் போது கூட்டுறவு ஆணையாளரின் முன் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு முன் அங்கீகாரம் இன்றி 2010 – 2019 காலத்தில் கம்பஹா மாவட்டத்தில் 06 சனச சங்கங்கள் கம்பகா அபிவிருத்தி தனியார் கம்பயின் (GDC) ரூபா 486 மில்லியன் முதலீடு செய்திருந்தது. இந்த ஆதன முதலீட்டுக்காக எந்த ஒரு வருமானமும் சங்கத்திற்காக கிடைக்கப் பெறாமையினால் சங்கங்களின் நிதி இழப்பீட்டுக்கு உட்பட்டிருந்ததுடன் அந்த ஆதன முதலீடு தொடர்பாக எந்த ஒரு சட்ட ரீதியான ஆவணமும் சங்கத்திடம் காணப்படவில்லை. இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காமை மற்றும் கூட்டுறவு ஒழுங்கமைப் படாமையின் காரணமாக கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் நிதி நெருக்கடிக்கு உட்பட்டு செயலிழந்த நிலைமைக்கு உட்பட்டிருந்தது.	ஜீடீசீ நிறுவனம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தின் கீழ் இயலுமை காணப்படாது இருந்ததால் ஒழுங்குபடுத்துவதற்காகவும் சட்ட ரீதியான ஏற்பாடுகள் காணப்படவில்லை.	விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் 28 கூட்டுறவுச் சங்கங்கள் 2002 - 2022 காலப் பகுதியில் சங்க உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட	நீதிமன்ற நடவடிக்கையினால் உரிய நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள	விரைவாக நிதி நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்

ரூபா 623 மில்லியன் நிதி மோசடி மற்றும் நிதி முறைக் கேடுகள் தொடர்பாக 02 – 22 வருட காலம் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக விரைவாக தேவையான நடவடிக்கைகள் எடுத்து நிதி நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	சந்தர்ப்பங்கள் உள்ளது.	வேண்டும்.

1.5.21 தலைப்பு இலக்கம் 123 – வியாபார பெயர் பதிவாளர் திணைக்களம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தால் 2022 நவம்பர் 04 ஆம் திகதி முதல் கணனி மென்பொருள் முறைமையை பயன்படுத்தி வியாபார பெயர்ப் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் சேவை நலனாளிகளுக்க நேரடியாக முறைமை ஊடாக தொடர்பு கொண்டு சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கும், இணையதளம் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் இணையவழி முறைமையின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட வியாபாரப் பெயர்களை மாற்றுவதற்கும் மற்றும் வியாபாரப் பெயர்களை புதுப்பித்தலுமக்குமான செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் Manual system மூலம் பிரதேச செயலகங்களில் புதிய வியாபார பெயர்ப் பதிவு சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டதுடன் ரூபா 02 மில்லியனுக்கு கணனி இயந்திரம், ஸ்கானர் இயந்திரம் மற்றும் டொங்கிள் போன்ற உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மென்பொருள் பயன்பாட்டில் சான்று படுத்தப்பட்ட 11,583 மாத்திரம் சான்றிதழ் விநியோகிக்கப் பட்டிருந்தது.	தற்போது உரிய சட்ட ரீதியான ஏற்பாடுகள் வழங்கப்படாது இருந்தமையாலும் மென்பொருளில் இருந்து 2022 ஆம் ஆண்டு முதல் சான்றிதழ் பத்திரங்கள் 17,903 விநியோகிக்கப்பட்டுள்ளது.	செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.22 தலைப்பு இலக்கம் 126 – கல்வித் திணைக்களம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2016 அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேமா/ஸ்ரீ ரத்தனசார மகா வித்தியாலயத்தில் உத்தேசிக்கப்பட்ட அதிபர் உத்தியோக பூர்வ இல்லம், ஆசிரியர் உத்தியோக பூர்வ இல்லம் மற்றும் மாவத்தகம கனிஸ்ட வித்தியாலத்தின் அதிபர் உத்தியோகபூர்வ இல்லம் நிர்மானத்தை நிறைவேற்றுவதற்காக கோமாகம பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தால் தனியார் கம்பனி ஒன்றுடன் ரூபா 28 மில்லியன் பெறுமதியில் 2016 நவம்பர் 25 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் 2017 மே 23 ஆந் திகதி முதல் 180 நாட்களில் மேற்கூறப்பட்ட ஒப்பந்ததின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்த காலம்	பதிலளிக்கப்படவில்லை.	அரசாங்கத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்த நட்டங்களை சரியாக மதிப்பீடு செய்து ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிடல் வேண்டும்.

	முடிவடைந்து 05 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தப் பணிகளுக்கு உரியதாக செலுத்தப்பட்ட ரூபா 8.6 மில்லியன் முற்பணத் தொகை விளைவற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 1.1 மில்லியன் மாத்திரம் ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிடப்பட்டுள்ளது.		
(ஆ)	மேமா/ஹோ/தித்தெணிய கனிஸ்ட வித்தியாலயத்தில் (110x25) முன்று மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மானித்தல் 2018 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் 2024 ஆம் ஆண்டு வரை அதன் முதலாவது மாடியின் வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டதுடன் தரை மாடியில் கிறில் பொருத்துதலை உள்ளடக்கிய பணிகள் சிலவற்றின் வேலைகள் தொடர்ந்தும் எஞ்சியிருந்தது. ரூபா 10 மில்லியன் செலவிடப்பட்ட இந்தக் கட்டிடத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக 2019 ஆம் ஆண்டின் பின்னர் நிதியேற்பாடு கோருதல் அல்லது வழங்குதல் இடம்பெறாது இருந்ததுடன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	நிதியேற்பாடு கோரி வேலைகளைப் பூரத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2005 ஆம் ஆண்டில் உற்பத்தி உரித்து சபை செயலகத்திற்கு சொந்தமான KA-9989 மோட்டார் வாகனம் மேல் மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு அமைச்சிற்கு பயன்பாட்டில் காணப்பட்ட போது அதன் உதவி செயலாளரால் 2016 எப்ரல் 16 ஆந் திகதி மோட்டார் வாகனம் ஓடிச் செல்லும் போது தெற்கு அதிவேக வீதியில் கொட்டாவ நுழைவாயிலில் தீப்பிடித்தலுக்கு உள்ளாகி இழப்பிற்கு உட்பட்டிருந்தது. அதன் மொத்த நட்டம் ஆன ரூபா 2.7 மில்லியன் பெறுமதி அனுமதி இன்றி மோட்டார் வாகனத்தை ஓடிச் சென்ற உதவிச் செயலாளரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விரைவாக அறவிடுவதற்கு றடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபைகள் நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,942,608,702 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,333,696,025 ஆகும். அதன் பிரகாரம் நிதியத்தின் நிதி விளைவுகளில் ரூபா 391,087,323 வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன் அந்த வீழச்சிக்காக மூலதன செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 5,315,240,980 இனால் அதிகரித்தமை மற்றும் மீண்டெழும் செலவினம் ரூபா 10,126,887,451 இனால் அதிகரித்தமை காரணமாக இருந்தது.

3. பதவியணியினர் நிர்வாகம்

3.1 மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனையவை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நன்னடத்தை திணைக்களத்தின் மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப் பட்ட பதவிகளுக்குப் புறம்பாக 10 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டின் கொள்கை ரீதியாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சேர்ப்பதற்கு முடியாதிருந்தமையால் மிகையாகக் காணப்படுகின்றனர்.	விரைவாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மாகொல சான்றுபடுத்தப்பட்ட பாடசாலையில் தொழற் பயிற்சி ஆலோசனையாளர்கள் 05 பேர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்க வேண்டிய போதிலும் உள்ளபடியான பதவியணியில் ஒரு ஆலோசனையாளர் மாத்திரம் இருந்த போதும் அந்த உத்தியோகத்தரும் உள்ளபடியான கடமைகளில் இருந்து விலகி தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்ற மேற்றன் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தார். அதன் காரணமாக தொழிற் பயிற்சிப் பிரிவு காணப்பட்ட போதும் பயிற்சியளித்தல் அநேகமாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.	வெற்றிடத்தின் காரணமாக உணவு களஞ்சியத்தைப் பேணிச் செல்வதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் இல்லாமையினால் ஈடுபடுத்தப்பட்டதுடன் வெளி வளவாளர்களை ஈடுபடுத்தி பயிற்சியளித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.	பயிற்சி அளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.2 உள்ளூராட்சி நிறுவனங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
உள்ளூராட்சி நிறுவனங்களில் ஊழியர் வெற்றிடம் 5,722 காணப்பட்டது.	வெற்றிடங்களை அறிவித்தல் உரிய தரப்பினருக்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் இதுவரை ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வில்லை.	வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 பாடசாலை பதவியணியினர்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேல் மாகாண கல்வித் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 223 ஆக இருந்த போதிலும் அத் திகதியில் உள்ளபடியாக சேவையில் ஈடுபட்டிருந்த பதவியிணியனர் 194 ஆகும். அதன்	மிகை மற்றும் வெற்றிடங்களாக குறிப்பிட்டு காலாண்டு அறிக்கை பிரதம செயலாளருக்கும், கல்வி அமைச்சு இசுறுபாய இற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	விரைவாக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பிரகாரம் 42 உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையும் 13 உத்தியோகத்தர்களின் மிகையும் அவதானிக்கப்பட்டது. திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 68 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 80 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் முறையற்ற கல்வி உத்தியோகத்தர்கள், முறைசாரா கல்வி உத்தியோகத்தர்கள் 23 பேர் அங்கீகரிக்கப்பட்ட பதவியில் இருந்த போதும் எந்த ஒரு உத்தியோகத்தரும் சேவையில் ஈடுபட்டிருக்கவில்லை.		
(ஆ)	மேல் மாகாணத்தில் ஆசிரியர் சேவையில் 4,295 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் பாடத்தின் பிரகாரம் கவனத்தில் கொள்ளும் எந்த ஒரு பாடத்திற்கும் ஆசிரியர் மிகை காணப்படுவதுடன் கல்வி அமைச்சின் 2021 ஏப்ரல் 28 ஆம் திகதிய இலக்கம் 06/2021 என்ற சுற்றறிக்கையின் 6.1.3 பிரிவின் பிரகாரம் மாகாண பாடசாலைகளில் வலய மட்டத்தில் ஆசிரியர்களை சமப்படுத்திய பின்னர் மேலும் காணப்படுகின்ற பற்றாக்குறை / மிகை மாகாண கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் மாகாணங்களின் ஆசிரியர்களை சமப்படுத்துதல் மாகாண கல்வி பணிப்பாளரால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாகாணத்தில் சிங்கள மொழியில் 546 ஆசிரியர்களும், தமிழ் மொழி மூலத்தில் 148 ஆசிரியர்களும், ஆங்கில மொழியில் 07 ஆசிரியர்களும் ஆக மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	இது தொடர்பாக மாகாணக் கல்விச் செயலாளருக்கும் மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.	பற்றாக்குறை மற்றும் மிகைகளை சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2023 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய இலக்கம் மேம/அபரி071/வ.இ.மா/2023 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு பாடசாலையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றிய ஆசிரியர்கள் இடம் மாற்றம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஹோமாகம வலயத்திற்குரிய 81 பாடசாலைகளில் 357 ஆசிரியர்கள் மற்றும் 05 பாடசாலைகளில் 05 அதிபர்களும் மற்றும் பிலியந்தல வலய அலுவலகத்திற்குரிய 63 பாடசாலைகளில் 247 ஆசிரியர்களும் மற்றும் 08 அதிபர்களும் ஒரே பாடசாலையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றுகின்றனர்.	55 வயதை விஞ்சிய பதிலீடு இன்றி விடுவிக்க முடியாதிருந்தமை மேன்முறையீட்டின் காரணமாக இடமாற்றல் வழங்கப்படாமை போன்ற காரணங்களால் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை.	இடம் மாற்றலை அமுல் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சேவைக்கு ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் நியமனங்களுக்கு உரியதான தாபன விதிக் கோவையின் II அத்தியாயம் II ஆம் பிரிவின் 11.2.3 உப பிரிவின் பிரகாரம் தகுதி காண் காலம் முடிவடையும் போது அவர் அல்லது அந்த சேவையில் நிரந்தரமாக்குதல் அவரின் அல்லது அவர்களின் தகுதிகாண் காலத்தை நீடிப்பதற்கோ அல்லது தகுதிகாண் கால நியமனத்தை முடிவுறுத்துவதற்கோ திணைக்கள தலைவர் கவனத்தில் கொள்ள வேண்டியிருந்த போதிலும் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள 10 வலயக் கல்வி அலுவலகங்களில் 462 ஆசிரியர்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	462 பேர்களின் சேவைகளை நிரந்தரமாக்கல், தகுதிகாண் காலத்தை நீடித்தல், நியமனத்தை முடிவுறுத்தாத விடயங்களை ஏற்றுக் கொள்கின்றோம்.	தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சுகாதாரப் பதவியணியினர்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களில் தாதி உத்தியோகத்தர்கள் 1,638 பேர்கள், கனிஷ்ட சுகாதாரப் பதவியணி உத்தியோகத்தர்கள் 577 பேர் மற்றும் 27 சாரதிகளும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தொடர்ச்சியாக ஒரே நிலையத்தில் சேவையாற்றுவதுடன் கம்பஹா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பல்வேறு பதவிகளில் ஈடுபடுகின்ற 53 உத்தியோகத்தர்களும் சுகாதார அமைச்சின் பதவியணியில் 13 உத்தியோகத்தர்களும் நன்னடத்தை திணைக்கள பதவியணியினரில் 42 உத்தியோகத்தர்களும், சமூக சேவைகள் திணைக்களத்தில் பதவியணியினரில் 37 உத்தியோகத்தர்களும் ஆயுர்வேத திணைக்களத்தில் பதவியணியில் 253 உத்தியோகத்தர்களும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இடம் மாற்றல் பெறாமல் ஒரே நிலையத்தில் தொடர்ச்சியாக சேவையாற்றுகின்றனர்.	தாதி உத்தியோகத்தர் களுக்காக குறித்துரைத்த இடம் மாற்றல் கொள்கை ஒன்று காணப் படாதிருந்ததுடன் ஏனைய பதவியணியினருக்காக மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இடமாற்றலை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கொழும்பு உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவில் இலத்திரனியல் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோத்தர் (இயந்திரம்) பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் காரணமாக கொழும்பு மாவட்டத்தின் வைத்திய சாலைகளில் காணப்படுகின்ற உயிரியல் வாயு	மருத்துவ பொறியியல் பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை நிரப்பி பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும்.

	உபகரணங்களை பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தாமதம் அடைந்து இருந்தது.		
(இ)	ஆரம்ப சுகாதார சேவை நிலையங்களுக்காக ஒரு மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் தாதி உத்தியோகத்தர் நியமிக்க வேண்டியிருந்த போதிலும் கம்பஹா மாவட்டத்திற்குரிய ஆரம்ப சுகாதார சேவை நிலையங்கள் 45 இற்கு இடையே 03 நிலையங்களுக்காக மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் 12 நிலையங்களுக்காக தாதி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	இறுதி தடவையாக 2007 ஆம் ஆண்டின் போதே நாளது வரையாக்கப்பட்டிருந்தது. கம்பஹா பிரதேச சுகாதார சேவைகள் அலுவலகத்திற்கு உரிய அங்கீகக்கப்பட்ட, பதிவு செய்த மற்றும் தாதி உத்தியோகத்தர்கள் முறையே 42, 47 மற்றும் 11 ஆகும்.	விரைவாக உத்தியோகத்தர்களை நியமித்தல் வேண்டும்.

4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 திட்டமிடல்

4.1.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல நிறுவனங்களினாலும் தமது நிறுவனத்திற்காக ஒவ்வொரு ஆண்டிற்காகவும் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடை அமுல்படுத்துவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் எதிர் வரும் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் ஆயுர்வேத திணைக்களம், உள்ளூராட்சி அமைச்சு, பிரதம செயலகம், உள்ளூராட்சித் திணைக்களம் 2024 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் குறித்துரைத்த திகதியில் தயாரிக்காது இருந்துடன் பிரதம செயலாளர் அலுவலகம், உள்ளூராட்சித் திணைக்களம், இறைவரித் திணைக்களம் அரச நிர்வாக சுற்றறிக்கை 2/2020 இன் 03 ஆம் பந்தி மற்றும் இலக்கம் 12 வழிகாட்டியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டுக்குரிய திட்டம் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.